உ

# பாக்கிய தீபம்








அமரர்

## பாக்கியலட்சுமி மார்க்கண்டு

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

15-09-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கோண்டாவில் குமரகோட்டத்தை
வாழ்வகமாகக் கொண்ட

அமரர்

# பாக்கியலட்சுமி மார்க்கண்டு

( முன்னை நாள் அதிபர் – யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி )

அவர்களின்
சிவபதப்பேறு பெற்ற

ஓராண்டு நிறைவு குறித்த

# நினைவு மலர்

## 15-09-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மை அன்பாய் அரவணைத்து

வளர்த்து

உயர்வுக்கு வழிகாட்டி நின்று

வானுறையும் தெய்வமாகிவிட்ட

எம் அன்னைக்கு

இம்மலர் சமர்ப்பணம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
25-03-1945

விண்ணில்
25-08-2021

அமரர்

# பாக்கியலட்சுமி மார்க்கண்டு

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு நிறை பிலவ – ஆவணி நற் சங்கடஹர சதுர்த்தி நாள்
பூண்டொழுகு கல்விப் புலமையினாள் – மார்க்கண்டு
அம்மா வெனும் பாக்கியலட்சுமி – எம் இறைதாள்
சென்று ஓர் ஆண்டா? இல்லை சேவையினால் வாழுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அமரரின் சேவை விபரம் | 4 |
| 2. | அமரரின் வாழ்க்கை வரலாறு | 5 - 7 |
| 3. | பஞ்ச புராணம் | 8 - 10 |
| 4. | அமரரின் வாழ்க்கை நிகழ்வுகளின் நிழல்கள் | 11 - 54 |
| 5. | நினைவுக் குறிப்புக்கள் | |
| 6. | ஆய்வுக் கட்டுரை<br>( விடயம் - கற்கால யாழ்ப்பாணம்<br>ஒரு பிராரம்ப தொல்லியல் ஆய்வுக்குறிப்பு<br>- கலாநிதி செல்லையா கிருஷ்ணராஜா | 55 - 78 |
| 7. | நன்றி நவிலல் | 79 - 80 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு
# (ஓய்வு பெற்ற யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி)
# அவர்களின்
# வரலாற்றுப் பாதையில்

பிறப்பு - 25.03.1945

**கல்வி**

1. ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி.
2. உயர்கல்வி (கலைப்பிரிவு) யா/ இராமநாதன் கல்லூரி
3. பட்டப்படிப்பு (கலைப்பட்டதாரி - பேராதனைப் பல்கலைக்கழகம்.
4. பட்டப்பின் மேற்படிப்பு - கல்வியியல் (இந்து நாகரிகம்) யாழ். பல்கலைக்கழகம்

**சேவை விபரம்**

1. ஆசிரிய சேவை
   தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி (1970 - 1977)
   யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி (1977 - 1987)
2. உப அதிபர் - யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி (1987 - 1990)
3. அதிபர் (தரம் I) யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி (1990 - 2005)
4. ஓய்வு பெற்றமை - 25.03.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

சிவபூமி என்று அழைக்கப்படும் ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் கிராமம் சைவமும் தமிழும் தழைத்தோங்கி கல்வியிலும் கலைகளிலும் சிறப்புப் பெற்று விளங்கு கின்றது. இக்கிராமத்தின் குறிச்சியாக "குமரகோட்டம்" என்னும் சிறப்புப் பெயர் பூண்ட பகுதியில் வேளாளர் மரபில் வேளாண்மையைக் குலத் தொழிலாகக் கொண்ட கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் புதல்வர்களில் ஒருவராக மார்க்கண்டு 1898ஆம் ஆண்டு பிறந்தார். மார்க்கண்டு அவர்கள் தனது இளமைக் காலத்திலேயே வியாபாரத்தை முக்கிய தொழிலாகவும் சுருட்டுக் கைத்தொழில், விவசாயம் போன்ற தொழில்களையும் செய்து தனது ஊதியத்தைப் பெற்று வந்தார். இலங்கையின் தென் பகுதியில் வியாபாரத்தைச் செய்து இறுதியில் 1940ஆம் ஆண்டுக்கு முன் இல. 140, மனோன்மணி ஸ்ரோர்ஸ், கேகாலை வீதி, பொல்காவெல என்ற இடத்தில் பிரபல்யமான சுருட்டு, புகையிலை சாய்ப்புப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையை ஆரம்பித்து நடத்தி வந்தார். இவர் தனது சகோதரர்களுடன் ஒன்று சேர்ந்து செய்து ஊரில் அன்றிருந்த நிலையில் செல்வந்தர்களாக வாழ்ந்தார்கள்.

இக்காலப்பகுதியில் முருகேசு இராமுப்பிள்ளை, சின்னாச்சி தம்பதிகளின் மூத்த மகளான தங்கம்மாவை மார்க்கண்டு அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தனர். இல்லறப் பயனாக இரு ஆண் பிள்ளைகளும் நான்கு பெண் பிள்ளைகளும் பிறந்தனர். அமரர் இரத்தினம் (நீர்ப்பாசன இலாகா அரச ஊழியர், அமரர் கோபாலகிருஸ்ணன், அமரர் மனோன்மணி, அமரர் பாக்கியலட்சுமி, யோகம்மா, இராசலட்சுமி என்போர் பிறந்தனர். அதில் இரண்டாவது மகளாக 25.03.1945 அன்று அமரர் பாக்கியலட்சுமி அவர்கள் பிறந்தார். தங்க விக்கிரகமாக இருந்த குழந்தையை எல்லோரும் போற்றி வளர்த்தனர். சிறு வயதில் இருந்தே கல்வியில் மிக விருப்புக் கொண்டவ ராகவும், இறைபக்தி உடையவராகவும் வளர்ந்து வந்தார். சைவப் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அழைக்கப்பட்ட யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியையும், யா/ இராமநாதன் கல்லூரியில் தனது உயர் கல்வியையும் கற்ற பாக்கியலட்சுமி அவர்கள் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப் பட்டார். அங்கு கலைப்பட்டதாரியாகக் கற்று வெளியேறினார்.

அமரர் அவர்கள் தனக்கு மிகவும் விருப்பமான வேலையாகிய ஆசிரிய தொழிலைத் தேர்ந்தெடுத்து முதல் நியமனப் பாடசாலையாக திருகோண மலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் ஆசிரியர் தொழிலை ஆரம்பித்தார். பின்னர் தான் ஆரம்பக் கல்வியைக் கற்ற யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இடமாற்றம் பெற்று கடமையாற்றினார். இப்பாடசாலையில் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக என தனது திறமையினால் உயர்நிலையினை அடைந்தார். தனது பட்டப்பின் டிப்ளோமா கல்வியை யாழ் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். அத்துடன் இந்துநாகரீகத் துறையில் டிப்ளோமா பட்டத்தினை யாழ். பல்கலைக் கழகத்தில் 1981ம் ஆண்டு பெற்றுக் கொண்டார். கோண்டாவில் கிராமத்தின் நாற்திசையிலும் வாழும் மக்களின் நன்மதிப்பினைப் பெற்று "மார்க்கண்டு மிஸ்" என்று அன்புடனும், பெருமையுடனும் அழைக்கப்பட்டார்.

தனது சகோதரி அமரர் மனோன்மணி துரைராஜா அவர்களின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள் போல் நேசித்து வளர்த்தார். ரவீந்திரன், ரவிச்சந்திரன், ரவிகரன், துஸ்யந்தினி, தமயந்தி, ரவிதீபன் ஆகியோரை நன்கு கல்வி அறிவூட்டி அன்புடன் வளர்த்தார். அவர்களில் ரவீந்திரன் - அமரர் சசிகலா, ரவிச்சந்திரன் - லதா, ரவிதீபன் - வசந்தா, துஸ்யந்தினி - சசிகரன் தம்பதிகள் மூலம் வெர்னிஜா, கிருசாயினி, ஷயானி, கிருஷிகன், அர்த்தனா, ஹெம்சிகா ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டார். அவர்களும் நன்கு கல்வி கற்று உயர்நிலை அடையவேண்டும் என்பதே அமரர் அவர்களின் விருப்பமாக அமைந்திருந்தது.

நல்ல உடல்நலத்துடன் இருந்த அவர் திடீரென நோய்வாய்ப்பட்டு வைத்திய சிகிச்சைகள் பெற்றுவந்தார். 2021இல் உலகம் முழுவதும் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வைத்தியசாலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி 25.08.2021 அன்று இயற்கை எய்தினார். குடும்பம் பாடசாலைச் சமூகம் என எல்லோர் வளர்ச்சியிலும் தனது அயராத ஒத்துழைப்பினை வழங்கிய எங்கள் அன்னையின் மறைவு எமக்கு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவு குறித்து இறைவனை வேண்டுதல் செய்வதே எம்மால் முடிந்த காரியம்.

"விதியை வெல்ல யாரால் முடியும்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

## தேவாரம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னருள் ஆவடு துறை அரனே.

## திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்று அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலா கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே!

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்ம்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளை வில்லதோரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மிண்டுமென்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர் கெடமாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## மூன்றால் முன்னேற....

| | | |
|---|---|---|
| **அடக்கவேண்டியது** | – | **நாக்கு, கோபம், ஆசை** |
| **ஒழிக்க வேண்டியது** | – | **திருட்டு, பொய், சோம்பல்** |
| **காக்க வேண்டியது** | – | **வாக்குறுதி, நட்பு, அன்பு** |
| **மதிக்கவேண்டியது** | – | **முதியோர், மார்க்கம், சட்டம்** |
| **போற்றவேண்டியது** | – | **தைரியம், திருப்தி, மனமகிழ்ச்சி** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் தாய் தந்தை



அமரர் மா. தங்கம்மா

அமரர் சி.க. மார்க்கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்களின்
இளமைத்தோற்றம்



அமரர் அவர்கள் தி/கோணேஸ்வரா
இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக்
கடமையாற்றியபோது....



அமரர் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
பட்டம் பெற்றபோது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்களின் மூத்த சகோதரி அமரர் துரைராஜா மனோன்மணியும்
கணவர் அமரர் வை. துரைராஜாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் பாடசாலைக்கான காணி உறுதி அன்பளிப்பின்போது...



யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினருடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்களால் யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட 'இனியம்'



அமரர் அவர்கள் தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கடமையாற்றியபோது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன்



அமரர் அவர்கள் பாடசாலைக்கான தளபாடங்கள் அன்பளிப்பின்போது...



அமரர் அவர்கள் இலங்கை, இலண்டன், கனடா பழைய மாணவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது...



அமரர் அவர்களால் யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட சாரணர் இயக்கம்



சனசமூக நிலைய மெய்வல்லுநர் போட்டியின்போது...



2003 பரிசளிப்பு விழாவின்போது பிரதம விருந்தினர் கல்விப்பணிப்பாளர் திரு.ப. விக்னேஸ்வரன் அவர்களை வரவேற்றபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் 2003ம் ஆண்டு பரிசளிப்பு விழா மற்றும் நிறுவுநர் நினைவுநாள் நிகழ்வின்போது விருந்தினர்களுடன் அமர்ந்துள்ளபோது...



அமரர் அவர்கள் 1வது உயர்தர மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி வாணி விழா நிகழ்வின்போது...



அமரர் அவர்கள் 2004 உயர்தர மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பாடசாலைக் கொடியேற்றி ஆரம்பித்தபோது...



அமரர் அவர்கள் வெற்றிக்கிண்ணம் வழங்கும்போது...



அமரர் அவர்கள் 2006 இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினராக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி உப அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் 2004ம் ஆண்டு நடைபெற்ற
125வது ஆண்டு விழாவின்போது...



யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி உப அதிபர்
திரு.இ. அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழாவின் போது...



யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர்கள்
ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினரை வரவேற்றபோது...



அமரர் அவர்கள் பாடசாலை சென். ஜோன்ஸ் அணியைப்
பார்வையிட்டபோது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ
சாமி. ஸ்ரீஸ்கந்தராஜாக்குருக்கள்
"சிவாகம கிரியா ஞான வித்தகர்" "வேத வித்பன்னர்";
"சிவாகம கிரியா பூஷணம்" "சிவதொண்டு சீர்மணி";
ஆதீனகர்த்தா, பிரதமகுரு
அருள்மிகு ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் கோவில்,
(உப்புமடம்) கோண்டாவில்
அருள்மிகு ஸ்ரீ முன்னனீஸ்வரர் ஆலயம்,
கோண்டாவில்
சோதிடர், சமாதான நீதவான்

உ



Sivasri
Sami.Sriskandarajakurukkal
'sivagama Kiriya Gnana Vitthagar' ' Vetha Vitpannar'
'Sivagama Kiriya Pooshanam' ' Sivathondu Seermamani'
Sole Trustee and Manager, Chief Priest
Arulmigu Sri Chanthirasekara Pillaiyar Kovil,
(Uppumadam) Kondavil
Arulmigu Sri Munnaneesvarar Alayam,
Kondavil
Astrologer, Justice of Peace ..../..../20....

# கண்ணீர்ப் பூக்கள்

அமரராகிய செல்வி பா. மார்க்கண்டு அவர்கள் பல பாடசாலைகளிலும் தனது கடமைகளைத் தவறாமல் செய்த தன்னலம்பாராத ஓர் உத்தம புருஷி.

கோண்டாவில் இந்துக் கல்லூரி எனும் பாடசாலையை முன்னேற்று வதற்காக இறைவனால் கொடுக்கப்பட்ட ஓர் ஆசிரிய பெருந்தகை. தன்னலம் பாராது எந்த நேரத்திலும் பாடசாலைக்குத் தேவையான உதவிகள் புரிந்தவர். பாடசாலையை முன்னேற்ற வேண்டும் என்ற மனப்பாங்குடன் அயராது உழைத்த செல்வி பா. மார்க்கண்டு தான் பிறந்த இடத்தில், தான் கற்ற பாடசாலையை முன்னேற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டவர். ஆசிரியர்களதும் மாணவ மாணவிகளது மனப்பாங்கின்படி எதுவித குறையும் விடாமல் எல்லோராலும் போற்றக்கூடிய நிர்வாகத் திறனுடன் செயற்பட்டார்.

இவ்வாறான கடமை உணர்வு உள்ளவரை இவ்வுலகில் மாத்திரமன்றி ஆண்டவன் மேலுலகிலும் நிறைவாக வைத்திருப்பார். அன்னாரது மறைவு அவருடைய குடும்பத்திற்கு மாத்திரமல்லாமல் பாடசாலைச் சமூகத்திற்கும் ஓர் பேரிழப்பு ஆகும். அன்னாரை இழந்து தவிக்கின்ற அன்பு உள்ளங்கள், உறவுகளுக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவஸ்ரீ சாமி. ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள்**
ஆதீனகர்த்தா, பிரதமகுரு
அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் கோவில், (உப்புமடம்)
அருள்மிகு ஸ்ரீ முன்னனீஸ்வரர் ஆலயம்,
கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை நிறைந்த மானிடமாக அமரர் அதிபர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு என் நினைவுகளில்...

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் 19ம் நூற்றாண்டில் இம்மண்ணில் சைவமும் தமிழும் தழைத்தோங்க முன்னெடுத்த சிந்தனை வழிநின்று, கோண்டாவில் கிராமத்தில் 1878ம் ஆண்டு பிரம்மஸ்ரீ வெங்கடாசலபதி ஐயர் அவர்களால் சைவப்பெருவள்ளல்களான திரு வைரவநாதர் இராமுவும் திரு.இராமநாதர் ஆறுமுகம் அவர்களும் இணைந்து வழங்கிய செம்மண் காணியில், திண்ணைப்பள்ளிக்கூடமாக விதையிடப்பட்டு இன்று பெருவிருட்சமாக வளர்ந்துள்ள யாழ்ப்பாணம் கோண்டாவில் இந்துக்கல்லூரி என்னும் அறிவாலயத்தின் வளர்ச்சிப்பாதையில் தங்களது சீரிய தலைமைத்துவத்தினாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் வேருக்கு நீருற்றி வளர்த்த அதிபர்கள் வரிசையில் அமரர். செல்வி. பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்களின் காலடிச் சுவடுகள் காலத்தில் கரைந்து போகமுடியாதவை.

கோண்டாவில் கிராமத்தின் செம்பாட்டு மண்பெற்றெடுத்த பெருமாணிக்கங்களுள் ஒருவரான செல்வி. மார்க்கண்டு அவர்கள் இந்த பாடசாலையினாலேயே வார்த்தெடுக்கப்பட்ட மாணவியாக மட்டுமல்லாமல் மூன்று தசாப்த காலங்கள் ஆசிரியராய் உபஅதிபராய் பின்னர் அதிபராக தன்வாழ்வினை அர்ப்பணித்தவர். அவரது பிறப்பின் பயன் என்பது கல்வியினால் ஏழைகள் கண்திறத்தல் என்னும் பெரும் பணியாய் கோண்டாவில் மண்ணில் விளைந்து முக்தியடைந்தது என்றால் இவ்விடத்தில் மிகையாகாது.

தசாப்தங்கள் தாண்டியும் சகாப்தமாய் விரிந்த கோண்டாவில் இந்துக்கல்லூரியின் இன்றைய வளர்ச்சி நிலைக்கும் அதன் உன்னத நிலைக்கும் தனது வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்த அதிபர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்களின் பற்றுதியும், தொலைநோக்கும் தொடர்ந்த தளராத உழைப்பும் மிகக்காத்திரமான பங்களிப்பினை பதிவுசெய்துள்ளது.

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் நெஞ்சில் உரமும் கொண்ட பாரதியின் புதுமைப்பெண்ணாக தன்னை வார்த்தெடுத்து பாடசாலையின் உயர்ச்சிக்காய் மட்டுமன்று பாடசாலையுடன் இணைந்த சமூகத்தின் செழுமைக்காகவும் மாணவச்செல்வங்களின் பல்துறை ஆளுமை மேம்பாட்டிற்காகவும் கனவுடன் உழைத்தவர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு நிறைவினையும் நூற்றிஇருபத்தியைந்தாவது அகவையினையும் கொண்டாடியபோது அவரின் வழிகாட்டலும் பங்களிப்பும் வார்த்தைகளுக்குள் வரையறுக்கப்படமுடியாதளவிற்கு மிகவும் ஆக்கபூர்வமானதாகவும் சிறப்பானதாகவும் எல்லோர் சிந்தைகளிலும் சிறப்புபெற்றது.

காலத்தின் வேகமான கோலத்தில் வாழ்க்கையின் வசதிகளும் வரம்புகளும் விரிவடைந்தும் புதுமையடைந்தும் பரிணாம மாற்றமடைந்து கொண்டிருந்த போது தனது பாடசாலையின் மாணவச்செல்வங்களும் சமூகமும் கூட அதனை பெற்றுக்கொள்ளவேண்டும் எனப் பேரவாக் கொண்டார். கற்றல் மற்றும் கற்பித்தல் வசதிகளையும் வாய்ப்புகளையும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு பௌதீக வளங்களின் அவசியம் இன்றி யமையாதது. அதனை நன்குணர்ந்த அதிபர் செல்வி மார்க்கண்டு பாடசாலையோடு இணைந்த சூழலில் இருந்த காணிகளை பழைய மாணவர்களின் முழுமையான பங்களிப்புடனும் நன்மனதோர்களின் ஆதரவுடனும் பாடசாலையின் வளாகங்களாக உரித்தாக்கி மாணவர்களும் ஆசிரியர்களும் எதிர்கொண்ட இடநெருக்கடியை உடைத்தெறிந்து பாடசாலையின் விரிந்த எதிர்காலத்திற்காய் உரமிட்டார்.

கற்றலின் இலக்கு கலங்கரை விளக்காக தலைநிமிர்ந்து திசைகாட்டிக் கரைசேர்த்தல் என்னும் உயரிய இலக்கை ஒவ்வொரு பிள்ளைச்செல்வமும் கொண்டிருப்பதற்கு ஏட்டுக்கல்விக்கும் அப்பால் அவர்களது உடலும் உளமும் உரம்பெறவேண்டும் வளம் பெறவேண்டும் என்பது மிகமிக அவசியமானது என்பதனை மனதிலிருத்தி பாடசாலைக்கென விளையாட்டு மைதானத்தை விருத்திசெய்ததிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக வகுப்பறைகளையும் வளங்களைக்கொண்ட மாடிக்கட்டிடங்களையும் உருவாக்கியதிலும் அதிபர் மார்க்கண்டுவின் அயராத உழைப்பும் தளராத முனைப்பும் முதன்மையானவை. அதன் காரணமாகவே கோண்டாவில் இந்துக்கல்லூரி இன்று ஏனைய அயல் பாடசாலைகளுக்கு எந்த விதத்திலும் குறையாத கல்வி வளாகமாக பரந்து விரிந்து நிற்கின்றது.

அவரது அந்த முயற்சியில் அவர் ஏறாத படிகளும் தாண்டாத தடைகளும் பெற்றுக்கொள்ளாத பெருமனதோரின் ஆதரவும் இல்லை எனலாம். பாடசாலையின் பழையமாணவர்கள், சமூகம், நலன்விரும்பிகளும் நன்மனதோர்களும் அதிகாரத்திலும் ஆட்சிபீடத்திலிருந்தோர் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அதிபரின் " கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திற்காக" என்ற அன்பு வலைக்குள் சிக்கவைக்கப்பட்டனர்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் அருள்வாக்கிற்கு பொருள்தந்தவர் அதிபர் மார்க்கண்டு அவர்கள். தளராத துணிவும் அயராத உழைப்பும் எவராலும் மறுத்துரைக்கமுடியாத மகிழ்வான வார்த்தைகளும் நிறைவான எண்ணமும் அந்த சராசரியான உயரம் கொண்ட பெண்மணியின் இலக்கணமாக இருந்ததென்றால் அவர் இந்தப் பாடசாலையின் மாணவர்களில் ஒருவராக வார்த்தெடுக்கப்பட்ட விந்தைகளின் உன்னதங்களில் ஒன்றாகவே உயர்ந்து நிற்கின்றது.

இத்தகைய உன்னதமான பாடசாலையில் அதிபர் மார்க்கண்டு அவர்களின் கீழ் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தமை என்னுடைய கல்விப் பணியில் மாத்திரமல்ல எனது சிந்தனைப்புலத்திலும் பொறிக்கப் பட்டுள்ள ஆழமான பதிவுகளாகவே உள்ளன.

இந்த அழகிய தீவினை பலதசாப்தங்கள் தாண்டியும் சீரழித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சனை 1990ம் ஆண்டில் மீண்டும் கூர்மையடைந்த போது மட்டக்களப்பிலிருந்து யாழ்மண்ணிற்கு வந்த அந்த வருடம். ஆசிரியப்பணியைத் தொடர இடம் தேடி தஞ்சமாக குடியமர்ந்த கோண்டாவில் கிராமத்திலுள்ள இந்தப் பாடசாலைக்கு தற்காலிகமாக இணைப்புப் பெற்றுத்தான் அங்கு சென்றேன். அங்குள்ள அதிபர் என்னை ஏற்பாரா இல்லையா என்ற அவநம்பிக்கை நிறைந்த மனதுடன் பாடசாலைக்குள் பிரவேசம். இங்கு ஏற்கவே இரண்டு சமூகக்கல்வி ஆசிரியர்கள் நிரந்தரமாக கடமையாற்றிக்கொண்டிருந்தபடியினால் எனது வருகை மேலதிகம் தான். ஆனாலும் இவற்றையெல்லாம் தாண்டியதாக மகிழ்மனமும் சிறுநகையும் குறுநன் தோற்றமும் கொண்ட தாய்மையின் தோற்றமாய் செல்வி மார்க்கண்டு அம்மா அவர்கள் எனது உள்ளத்தில் முதற்பதிவானார்கள். மனிதவாழ்வில் நாங்கள் காணும் முதற்தரிசனம் தான் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையான உறவின் வலிமைக்கும் நட்பின் பெருமைக்கும் அன்பின் அளவுகடந்த பிணைப்பிற்கும் தளமிடுகின்றது என்பது அன்று நிதர்சனமாகியது.

அன்றைய இக்கட்டான சூழலில் இடம்பெயர்ந்த வாழ்வும் இருப்புக்காக போராடும் அவசியமும் மட்டும் தான் வாழ்வின் முதலுரிமைகளாக கூர்மைப்பட்டிருந்த நிலையில் எனது மனவுறுதி உடைந்து போகாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலம் பற்றிய கனவுகள் சிதைந்து போகாமலும் இருந்தமைக்கு கோண்டாவில் இந்துக் கல்லூரியில் கற்பிக்க கிடைத்த வாய்ப்பும் சக ஆசிரியர்களின் தோழமையும் அவற்றையெல்லாம் விஞ்சிநின்ற அதிபர் மார்க்கண்டுவின் அன்பும் முதன்மையானதாகவும் அரவணைப்பாகவும் இருந்தது என்பதனை நான் இவ்விடத்தில் பெருமையுடனும் தாழ்மையுடனும் பதிவுசெய்வதில் பேருவகையுடன் நிறைவுகொள்கின்றேன். இந்தப்பாடசாலை யில் தொடங்கிய அதிபர் மார்க்கண்டுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் இடையிலான அன்புப் பாலம் எனது கல்விச்சேவை பலபரிமாணங்களாய் விரிந்து மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராய் உயர்ந்திருந்த காலத்திலும் கூட அவர் என்நெஞ்சில் மதிப்பு மிகு அதிபராகவும் எனது அன்பான சகோதரியாகவும் உயர்ந்து நின்றார்.

இந்தப்பாடசாலையினதும் மாணவர்களினதும் உயர்ச்சிக்காய் எப்பொழுதும் உழைத்த அதிபர் அவர்கள் தனது பெறாமகன் இரவிகரன் அவர்கள் ஊடாகவும் தொலைபேசியூடாகவும் வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் தொடர்புகொள்வார். அவரது வேண்டுகோள்கள் எவற்றையும் என்னால் சாதாரணமாக புறந்தள்ள முடிவதில்லை. அது எனக்கும் அவருக்கும் மட்டுமல்ல கோண்டாவில் இந்துக்கல்லூரிக்கும் இடையிலேற்பட்ட பிராப்தபயனாகவே விளைந்துள்ளது.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்துடனான அவரது மிகநீண்ட வாழ்வு அவரது பணி இளைப்பாறலுடன் கூட முடிவுறவில்லை என்பது அவரது இளைப்பாற்றுக்காலங்களில் அவரை சந்தித்து அளாவிடும்போது மீளவும் நினைவாயும் கனவாயும் தொடர்ந்துகொண்டே இருந்தது.

மரணம் என்பது எல்லோருக்கும் மறைவல்ல: சிலருக்கு நிறைவு. அவர்களில் ஒருவர் எனக்கும் எனது குடும்பத்திற்கும் மிகவும் அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய அதிபர். செல்வி. பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்பது எங்கள் அதிபர் மார்க்கண்டுவின் வாழ்வின் நிறைவிலும் நினைவிலும் என்றும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

**திருமதி. பிரேமாவதி செல்வின்**
ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
முன்னாள் ஆசிரியர் கோண்டாவில் இந்துக்கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோண்டாவில் இந்துவின் இராஜமாதா.....

**"வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி**
**மக்களின் மனதில் நிற்பவர்–யார்**
**மாபெரும் வீரர் மானம் காப்போர்**
**மக்களின் மனதில் நிற்கின்றார் "**

இலங்கை கல்வி நிருவாக சேவையில் காலடித்தளம் பதித்து பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கபடாதவர்களாக நாம் மூவர் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்த காலமது. என்று முடியும் இந்த இருண்டயுகம் என்ற எதிர்பார்ப்புடன் சில காலம் கடந்தது. ஒரு நாள் "ரவி நீங்கள் மூன்று பேரும் வாகனத்தில் ஏறுங்கள், நாங்கள் பாடசாலையொன்றை தரிசிக்க போகின்றோம். இன்று உங்களுக்கு Training Start" என்றவாறு வரதன் Sir இன் குரல் ஒலித்தது. இந்த அழைப்பானது கல்வி நிருவாக சேவையின் முன் பயிற்சிக்காலத்தில் கற்றவற்றை அனுபவரீதியாக பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் எப்போது வரும், எமது பதவி நிலைக்கான அங்கீகாரக்கணம் எப்போது கிடைக்கும் என அங்கலாய்த்துக் காத்திருந்த எமக்கு ஏதோ நீல் ஆம்ஸ்ரோங் நிலவில் காலடி எடுத்து வைத்தது போன்ற உணர்வு, இதனிடையே வயதில் இளையோரான நாம் எவ்வாறு பட்டறிவு மிக்க அதிபர், ஆசிரியர் குழாமை கையாளப்போகின்றோம் என்ற பயம் இருந்தும் வரதன் Sir கொடுத்த தைரியத்தில் வாகனத்தில் பயணித்து யா/கோண்டாவில் இந்து ம.விக்குள் நுழைந்தோம்.

அன்னைக்கேயுரித்தான வாஞ்சையுடன், "ஈன்ற பொழுதில் பெரிது வக்கும் தன் மகனை சான்றோன்" நிலையில் வைத்து எம்மை வரவேற்கும் அதிபரொருவரைச் சந்தித்தோம். அவர்தான் அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்கள். முகிழ் நிலை கல்வி நிருவாகிகளான எமக்கு பாடசாலைசார் விடய அவதானிப்புக்கள் பற்றி படிநிலைப் பரிமாணத்தில் விளக்கமளித்து எமது கன்னித்தரிசிப்பினை பய, அச்ச உணர்வு எதுவுமின்றி நிறைவுற தனது உச்ச பங்களிப்பினை வழங்கினார். அன்றிலிருந்து எமக்கு ஏறு முகம்தான். இதுவே அமரருடனான பிணைப்பு மின்வலுப் பிணைப்பாக அவரது இறுதிக்காலம் வரை தொடர கால்கோளாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் ஆறிலிருந்து அறுபதுவரை யா/கோண்டாவில் இந்து ம.வியுடன் இணைந்திருந்தமை ஒரு வரலாற்று சாதனையென்றே கூறலாம். சின்னஞ்சிறு பாலகியாக காலடித்தளம் பதித்து, ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக, தொடர்ந்தும் தன் வாழ்வின் இறுதிக்காலம் வரை தான் சார்ந்த சமூகத்துக்கும் பாடசாலைக்கும் தனது உச்ச பங்களிப்பினை வழங்கினார். நகர்புறம் நோக்கிய மாணவர் நகர்வின் மத்தியிலும் மாணவர் அனுமதியில் வளர்ச்சிப்போக்கினை பெறுவதென்பது கடினமானதொன்று. இதனை சர்வ சாதாரணமாக கோண்டாவில் இந்துவில் சாதித்துக்காட்டியமை அவரது சிறந்த தலைமைத்துவதிற்கே கட்டியம் கூறி நிற்கின்றது. தனது காலத்திலேயே "1C" தர பாடசாலையாக தரமுயர்த்தி சமூகத்தின் நன்மதிப்பினை பெற்றுக் கொண்டமை அவரது சேவைக்குரிய மணிமகுடம் என்றே கூறலாம்.

உயர்தரம் ஆரம்பித்த முதல் குழுவிலிருந்து இரு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற வைத்ததன் மூலம் விதைப்பின் அறுவடையினை தனது சேவைக்காலத்தில் பெற்றுக்கொண்டமை அமரரின் சேவைக்கான இறை ஆசியென்றால் அது மிகையாகாது.

"பிள்ளையை பெற்றுவிட்டால் போதுமா பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா" என்பதற்கேற்ப பாடசாலை சமூகத்தினரின் பங்குபற்றுதலுடன் பாடசாலைக்குரிய உச்ச வளங்களை பெற்றுக்கொடுத்த பெருந்தகை அமரர் அவர்கள். தான் சார்ந்த சமூகத்துடன் ஒன்றிணைந்து கோண்டாவில் இந்து மவியை முன்னிலைப் பாடசாலையாக மாற்றி அமைத்தவர்.தனது சேவைக்காலத்தில் பாண்ட் வாத்திய அணி, சாரணிய அணி, வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட, துடுப்பாட்ட அணி, என்றவாறு சகல அணிகளையும் கட்டமைத்து முழுமையான இணைப்பாடவிதான செயற்பாடுகளுடன் கோண்டாவில் இந்து மவியை செயற்படுத்திய அதிபர் பெருந்தகை அமரர் பாக்கியலட்சுமி அம்மையாரவர்கள். இவற்றினூடாக இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க சாதனையை பாடசாலை ஈட்டியிருந்தமை இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களது ஆற்றல்களை இனங்கண்டு அதற்கேற்ப பொருத்த மான பணிக்கூறுகளை கையளித்து அவர்தம் உள்ளார்ந்த ஆற்றல்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கொணர்வதில் இவருக்கு நிகரில்லை. அத்துடன் ஆசிரியர்களது பிரச்சினைகளை அவர்களது நிலையில் நின்று ஆராய்ந்து அதற்குரிய தீர்வினை பெற்றுக்கொடுப்பதில் முன்னிற்பார்.

மென்போக்கு சிந்தனையாளராக, அதிர்ந்து போசாத இயல்பினரான போதிலும் "அவையில் அஞ்சாமை" அமரரது விசேட குணவியல்பாகும். சரியென நினைத்ததை சபையில் எந்த அச்சமுமின்றி துணிவுடன் எடுத்துரைத்து நியாயத்தை நிலைநாட்டக் கூடிய ஆற்றல் அவரிடமிருந்தது. அமரரின் இயல்பான நேர்மனப்பாங்கு, மனித நேயப்பண்பு, சமூக நீதிக்கான பங்கேற்பு, தலைமைத்துவத்திற்கு கட்டுப்படல், காலமறிந்துதொழுகுதல் என்பன ஆசிரியர்கள், உயர் நிலை அலுவலர்கள், பாடசாலை சமூகத்தினரிடையே அவரை சமூக நட்சத்திரமாக மிளிர வைத்தன எனலாம்.

**"இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்**
**இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்"**

என வாழந்த பன்முக ஆளுமை திறமை கொண்ட பாக்கியலட்சுமி அம்மையாரவர்கள் இன்று நம்மிடையே இல்லை அவர் விதைத்த விதைகள் விருட்சமாகியுள்ளன.அந்த விருட்சத்தின் நிழலில் எம் சமூக எழுச்சிக்கு உழைப்போமாக.

"கோண்டாவில் இந்து உள்ளவரை
அன்னையின் நாமமும் நிலைத்திருக்கும்"

**யோ. ரவீந்திரன்**
ஓய்வுநிலை வலயக் கல்விப்பணிப்பாளர்,
வடமராட்சி, யாழ்ப்பாணம்.

**உங்களை நீங்களே மதிப்பது ஆணவம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த மார்க்கண்டம்மா

அமரர் அதிபர் பா. மார்க்கண்டு அம்மா அவர்களின் தோற்றப் பொலிவு, சிரித்த முகம், திருநீறு அணிந்த நெற்றி, கண்ணாடி அணிந்த பார்வை, நிமிர்ந்த நடை என்பன அவரை மிகுந்த மரியாதைக்குரியவராகக் காண்பிக்கும். நான் யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கு பாடசாலை தரிசிப்பிற்கோ அல்லது வேறு விடயங்களுக்காகவோ செல்லும் போது "வாருங்கள்" என மலர்ந்த புன்சிரிப்புடன் அழைக்கும் வரவேற்பும், எந்த நேரம் சென்றாலும் தேநீர் உபசாரம் என்பனவும் என்றும் நினைவில் நிற்கும்.

பாடசாலை நிர்வாகம், பொதுப் பரீட்சைகளை நடாத்தும் திறமை, சக அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடும் பண்பு, தனது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கும் உறுதி என்பன அவரை ஒரு ஆளுமைமிக்க அதிபராக கல்விப்புலத்தில் மதிப்புப் பெற வைத்தது என்பதனை பெருமையுடன் நினைவு கூறுகின்றேன்.

அதிபர் அவர்களின் மறைவு அவரது குடும்பத்தினருக்கு பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அதிபர் அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு. ச. ரவீந்திரநாதன்**
ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் அஞ்சலிக்கின்றேன்....

சத்யம் தர்மம் என்று சாத்வீக வழி வாழ்ந்த மார்க்கண்டு அம்மா எங்கள் ஆசிரியராய் அதிபராய் சமூக சேவகியாய்..... அன்பால் ஊரைக் கூட்டி அழகாக்கிய தெய்வம்!

தான் வாழும் வரையும் அன்பால் ஊரைக்கூட்டி
தன்பால் வைத்த உள்ளம் நீங்கள்
எம் கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போய்விடுமோ.....?
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயர்வாகும்.... உறவாகும்.....
மண்விட்டு மறைந்த நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும் எம் கண்விட்டு மறையாது எம் எண்ணம் விட்டு நீங்காது.....
நிமிர்ந்த நடை பொலிந்த தோற்றம் எவர்க்கும் அஞ்சாத வார்த்தை
தன்னலம் கருதாத அன்பின் அருந்தவத் தோன்றல் எங்கள் அம்மா...
சித்திரம் தீட்டிய சுவரிற்கூட இடைவெளி தெரியும் ஆனால்
அம்மாவின் உள்ளத்தில் இடைவெளியில்லா அன்பு பெருக்கெடுக்கும்
எல்லா மரணங்களும் எம்மை கலங்கச் செய்வதுண்மையே
ஆனாலும் சில மரணங்கள் எம்மை உயர்நிலையிலே சிந்திக்கவும் செயலாற்றவும் வைக்கிறது...
காவியங்களில் மட்டுமே காணுகின்ற நல்லிதயங்களை நேரில் காண்பது அரிது. பாற்கடலை பதர் எறும்பு பருக நினைத்ததாம்.... அது போன்றதே அம்மாவின் பெருமை தனைச் சொல்ல எனக்கு தகுதியுண்டோ?....

அறப்பணி பொதுப்பணி சமயப்பணி சமூகப்பணி என நடமாடி அவர் ஆற்றிய பணிகளை சொல்லில் அடக்க முடியல்ல... முடியல்ல....

அறிவுக்கும் அன்புக்கும் பண்புக்கும் எடுத்துக் காட்டானவர் தமிழ்ப்படிப்பில் சிறந்தவர் பட்டங்கள் பல பெற்றவர்.
உங்கள் நினைவலைகள் எம்மனக்கண்ணில் என்றுமுண்டு
உம் பாச நினைவுகளை எப்படி மறப்போமம்மா.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாகப் பழகிநீர்! பண்பாட்டை போதித்தீர்! உமது அன்பான வார்த்தைகளில் நெகிழ்ந்து போனது எம் உள்ளங்கள்....

மனிதம் உள்ள நல்உள்ளம்
மரணித்து விடவில்லை பாவம் இந்த மண் இழந்துவிட்டது!!!

அறவழி நின்ற அறிவுப்புத்தகம் அன்பின் சிகரம் இன்று
அனைத்தையும் இழந்தோம்....

**திருமதி. ப. தியாகராசா**
உப அதிபர்,
யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி.

**எப்பொழுதும் உங்கள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். எப்போதும் நம்பிக்கையோடும், எல்லோரிடத்திலும் நட்போடும் இருங்கள். எப்போதும் கற்றுக்கொண்டும் வளர்த்துக்கொண்டும் உங்களை முன்னேற்றிக் கொண்டு இருங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பணியாம் தெய்வப்பணி கண்ட அமரர்

"கல்விப்பணியே தெய்வப்பணி" என்று எண்ணிய நல்லாசிரியர் வழித்தோன்றல்களின் கடமை உணர்வில் வளர்ந்தபோதும் வழிநடத்தும் அதிபர்கள் வரிசையில் தடம் பதித்தவர் அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்கள்.

அமரர் காலத்தில் பாடசாலை வளங்கள் போதாமல் இருந்தமை பெரும் குறையாக இருந்தது. குறைகளுக்கு முகம்கொடுத்து எதிர்நீச்சலுடன் பாடசாலைச் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி கடல் கடந்த நல்ல பழைய மாணவர்கள் நலன்விரும்பிகளது ஆதரவுடன் தேவையான வளங்களைப் பெற்று திட்டமிட்டு நிறைவேற்றி வெற்றிகண்டவர். பாடசாலைச் சமூகமும் முழு ஒத்துழைப்பை நல்கி வந்தது.

தமது காலத்தில் க.பொ.த( உ/த) வகுப்பை ஆரம்பித்து கோண்டாவில் இந்துக் கல்லூரியிலிருந்தே பல்கலைக்கழகம் செல்லக்கூடிய மாணவர்களை உருவாக்கினார். கனடா, இலண்டன் பழைய மாணவர் அமைப்புக்களை நாடி இரு பகுதியினரும் கூட்டாகவும், தனித்தனியாகவும் அயல் காணிகளை வாங்கி கல்லூரிக்கு வழங்குவதற்கு தூண்டுகோலாக இருந்தார். ஓய்வுபெற்ற பின்பும் தனது இறுதிக்காலம் வரை நம்பிக்கை நிதிய செயலாளராக இருந்து சேவை புரிந்தார். அம்மா அவர்கள் அமரரான செய்தியை கடந்த வருடம் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். ஓராண்டு பூர்த்தியில் கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தினூடாக அஞ்சலி செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்தமை மனத்தை ஆற்றுப்படுத்த வைக்கிறது. பழைய மாணவர்கள் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பழைய மாணவர் சங்கம்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துவின் அன்னை எனும் பெருமிதம்

குடும்பம் முதற்கொண்டு நிறுவனம் வரையிலான பொறுப்புக்கள் அனைத்தையும் திறம்படக் கையாளத் தெரிந்த பெண்களுக்கென்று இருக்கும் நிர்வாகத்திறன் போற்றுதற்குரியது.

பாடசாலையென்பது தனித்து கல்வி புகட்டும் இடம் மட்டுமன்றி நல்லொழுக்கங்களையும் நற்பண்புகளையும் போதிப்பதும், சமூகத்திற்கு உகந்த மாணாக்கர்களை உருவாக்குவதுமாகும். மேலும் இவர்களை மிகவும் சுறுசுறுப்பானவர்களாக மாற்றுவதும் பாடசாலையே. இத்தகைய பொறுப்புக்களைச் சுமந்து நிற்கும் பாடசாலைக்கு அதன் நிகழ்வுகள் அனைத்தையும் சுமூகமானதாக தொடரமுடியாது. ஆக எமது பாட சாலைக்கு மிகவும் சிறந்த தலைமையாக மார்க்கண்டு அம்மா கிடைத்தமை அனைத்து பாடசாலைச் சமூகத்தினருக்கும் கிடைத்த வரம் என்று தான் கூறவேண்டும். இந்தப் பாடசாலையின் பாதி வரலாற்றுப் பக்கங் களுக்கென்று தனியான சொந்தக்காரியாக இருப்பவர் அன்னையே. கோண்டாவில் இந்து மகா வித்தியாலயமானது இன்று கோண்டாவில் இந்துக் கல்லூரியாக மாற்றமடைந்தாலும் அந்த மகாவித்தியாலய சேவைக் காலங்களை அன்னாரின் பெயர் இல்லாமல் கடந்து போக முடிவதில்லை. அன்பான கனிவான பேச்சும் எப்போதும் புன்னகைத்திருக்கும் அந்த முகமும் இப்போது வரை நினைவில் நிறைந்திருக்கின்றது. தன் வாழ் நாட்களை பாடசாலைக்கென்றே அர்ப்பணித்த பெருமைக்குரியவர் அமரர் மார்க்கண்டு அம்மா அவர்கள்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் அதற்காக பாடுபடும் ஆசிரியர்கள் உட்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஒரு தாயைப் போன்று கனிவையும் தேவையேற்படின் அன்பால் கண்டித்தும் இந்த பாடசாலையை அவர் வழிநடாத்திய நாட்கள் உன்னதமானவை. தனித்து பாடசாலை என்பது மட்டுமல்லாமல் இந்தக் கிராமத்தின் வளர்ச்சியிலும் பெரும்பங்கு ஒன்றை அவர் வகித்திருக்கிறார் என்று தான் குறிப்பிட வேண்டும். பாடசாலையின் வரலாற்றுக் காலத்திலும் நீண்டதொரு தலைமைத்துவக் காலம் இவருடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் பிறந்த எல்லாம் இறப்பெனும் நிகழ்வைக் கடந்து தான் ஆகவேண்டும் என்பது உலக நியதி. ஆக, மார்க்கண்டு அம்மா அவர்கள் மண்ணை விட்டு மறைந்து போனாலும் பாடசாலையின் வரலாற்றுப் பக்கங்களிலும் எம் நினைவுகளிலும் நீடித்திருப்பார் என்பது நிதர்சனம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திருமதி. சி. கிருஷ்ணராஜா**
ஓய்வு பெற்ற ஆசிரியை
(கோண்டாவில் இந்துக் கல்லூரி)

**நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை**
**நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும்**
**உன் உழைப்பால் நீ எண்ணியது**
**உன்னை வந்து சேரும்.**
**நீ நீயாக இரு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத சேவையாளர்
# செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்களுக்கு
# எமது இதய அஞ்சலிகள்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கிற்கு அமைவாக தனது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்த ஒருவர் தான் அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்கள். குடும்பம், தொழில், சுற்றம் என எல்லா வகையிலும் தனது கடமையை மிகவும் அர்ப்பணிப்புடன் செய்தவர். குடும்பம் எனக் கொண்டால் தனது நலனை முன்னிலைப்படுத்தாது சகோதரர்கள், பெறாமக்கள், உறவினர்கள் என எல்லோருடைய நலனையும், தேவைகளையும் பூர்த்தி செய்வதில் முன்னின்று உழைத்தவர். அவரது ஆசிரியத் தொழில் மூலம் கோண்டாவில் கிராம மக்கள் பெற்ற சேவையை சொல்லி விளங்க வேண்டியதில்லை. 1977 தொடக்கம் கோண்டாவில் மக்களால் ஐயர் பாடசாலை என அழைக்கப்பட்ட யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேர்ந்து பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக சேவையாற்றினார்.

அமரர் அதிபராகக் கடமையேற்ற 1990ஆம் ஆண்டு போர்க்காலச் சூழல் நிலவிய காலமாகும். பாடசாலைகளில் வரவு ஒழுங்கின்மை, இடைவிலகல், உரிய நேரத்திற்கு முன் பாடசாலையை விட்டு வெளியேறல் போன்ற ஒழுங்கீனங்கள் இருந்தன. இவற்றையெல்லாம் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் சீர்படுத்தி திறமையாக வழிநடத்தினார். யாழ். மாவட்டத்தில் இடப் பெயர்வுகள் நடைபெற்றதால் தீவகம், வலிகாமம் வடக்கு போன்ற இடங்களில் இருந்து வந்த பல மாணவர்களைப் பாடசாலைக்கு உள்வாங்கி 1000 இற்கு மேற்பட்ட மாணவர்களை தளபாடப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் குறைந்த இடப்பரப்பிலும் வைத்து திறமையாக நிர்வகித்து அவர்களது கல்வி விருத்திக்கு வழிகாட்டினார். நொந்த உள்ளங்களை ஆற்றுப்படுத்தினார். இயற்கை அனர்த்த காலத்தில் நந்தாவில் சூழலில் உள்ள மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து கோண்டாவில் இளைஞர்களின் சுயமுயற்றி ஆற்றுப்படுத்தலுக்கும் ஒத்துழைப்பு வழங்கியவர். இப் பாடசாலை தற்போது கட்டடங்கள், நிலம் எனப் பல வளங்களுடன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக விளங்க மூலாதாரமாக செயலாற்றியவர் அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு ஆவார்.

பணம் மட்டும் இருந்தால் வளங்கள் பெருகமாட்டாது. அதற்கான முயற்சிகளும், செயற்பாடுகளும் பொருத்தமானதாக முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் பாடசாலை பல காணிகளைப் பெற பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பெரு முயற்சி செய்தவர். பாடசாலையை கல்லூரி யாக்க பல்வேறு செயற்பாடுகளை முன்னின்று நடாத்தியவர். அதற்கான பலன்களைப் பெற்று பெருமிதம் கொண்டவர். ஆயிரம் பாடசாலைகள் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை உள்வாங்கப்பட்டு விஞ்ஞான உயர்கல்வியை ஆரம்பிக்க பக்க துணையாக உழைத்தவர்.

யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி பௌதீக வளங்களைப் பெற மட்டுமன்றி, மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டு நற்பிரஜைகளாக வாழவும், அரச தொழில், தனியார் துறைகளில் மேன்நிலை அடையவும் வேண்டும் என்ற நோக்கில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமன்றி கல்விச் சுற்றுலா, கலை விழாக்கள், மைதானமின்றிய நிலையிலும் சிறந்த மெய்வல்லுநர் போட்டிகள் மென்பந்து துடுப்பாட்ட போட்டிகள், வலைப்பந்துப் போட்டிகள் என பல நிகழ்வுகளின் மூலம் மாணவர்களின் உடல் உள விருத்திக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் வழிவகுத்தார்.

சுயதொழில்கள், விவசாயம் எனச் செயற்பட்டவர்களின் குடும்பங் களிலிருந்து வந்த மாணவர்களை வைத்தியர்களாக, பொறியியலாளராக, அரச பெரும் பதவி உத்தியோகத்தர்களாக, பல்வேறு திணைக்களங்களில் உத்தியோகத்தர்களாக ஆக்கிய பெருமை அவரைச் சாரும். பெண் பிள்ளைகளின் கல்வி சிறப்பானதாக இருக்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். அவர்களை ஊக்குவித்து, ஆசிரியர்களின் துணை கொண்டு சிறந்த கல்வி பெற வைத்து, பல மாணவிகள் பல்கலைக்கழகம் செல்லும் நிலைமையை ஏற்படுத்தினார்.

அமரர் அவர்கள் பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் நேசித்தவர். அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி உதவுவதுடன் அவர்களின் வீடுகளில் நடைபெறும் தனிப்பட்ட விசேட நிகழ்வுகளுக்கும் சென்று வீட்டில் உள்ளவர்களுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாடிச் செல்லும் பழக்கம் உள்ளவர். அதனால் எல்லோரும் "அன்னை" போல் அவரைப் போற்றி வந்தனர். இச் செயற்பாடு அதிபர், ஆசிரியர்கள் ஒரே குழாமாகச் செயற்பட்டு பலரிடமும் நற்பெயர் பெறக் காரணமாகியது.

இதேபோல் தனது சுற்றத்தவர்களையும் நேசித்து, அவர்களின் சுக, துக்கங்களில் பங்கேற்று, நல்வழிகாட்டியாக விளங்கினார். இவ்வாறு உற்றாரால், சுற்றத்தவர்களால் ஊர் மக்களால் போற்றப்பட்ட சாதனையாளர் அன்னையின் மறைவு பேரிழப்பாகும். உலக நியதிகளுக்கேற்ப மனத்தினைத் தேற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அஞ்சலி செலுத்துவோர்

அன்னையின் காலத்து கோண்டாவில் இந்துக் கல்லூரிக் குடும்பம்

திரு.இ.அருணகிரிவாசன், திருமதி. வி. கடம்பமலர், திரு.ப. பால முகுந்தன், திருமதி. ஜா.முத்துக்குமாரு, திருமதி. வ. பரமேஸ்வரநாதன், திருமதி.ப.கணபதிப்பிள்ளை, செல்வி.வை.வசந்தி, திருமதி. சு. சர்வகுண சீலன், திரு. இ.இராஜ்குமார், திருமதி.கி. தயாபரன், திருமதி. சி. தவதேவி, திருமதி. சு. பாலபுத்திரன், திரு.இ. செந்தில்குமரன், திருமதி.ப. ரதிரஞ்சிதம், திருமதி. வ. பிறைசூடி, திருமதி. பா. ஜெயந்தி, திருமதி. நா. சண்முகரத்தினம், திருமதி. த. பகத்ராசா, திருமதி. அ. சிவாகரன், திருமதி. அ. சசிகலா, திரு.க. பத்மநாதன், செல்வி ஜெ. அனுசா, திரு.சி. சுரேஸ்நாதன், திருமதி. ப. சந்திரகாசன், திரு.க.ஜெனகன், திருமதி. செ.பராபரம், செல்வி. சி. சாரதா, திரு. அ. குணசேகரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத உறவு

"சின்றல்லா" என்ற அதிபரின் அழைப்புக்குரல் இன்றும் காதுகளில் ஒலிக்கின்றது. பாடசாலை என்பது ஒரு குடும்பம் என்பதற்கான அர்த்தத்தினை முழுமையாக உணரவைத்த பெருமை எங்கள் அதிபர் மார்க்கண்டம்மா அவர்களையே சாரும். பாடசாலை நிர்வாகத்தினை பிரித்து எல்லோரிடமும் கொடுத்து வேலை செய்விப்பதில் வல்லவர். சிறு விடயங்களையும் பொறுப்புடன் கூறி தவறுகள் நடந்துவிடாமல் சரியாகச் செய்விப்பார். காலைப் பிரார்த்தனை, வகுப்பொழுங்கு, போட்டி நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டி, பரிசில் தினம், குரு பூசைகள், சமய நிகழ்வுகள் போன்ற எல்லா நிகழ்வுகளையும் தனது நேரடி மேற்பார்வையின் கீழ் மிகச் சிறப்பாகச் செய்வார். மாணவர் ஒழுங்கு, கட்டுப்பாடு, கல்வி முன்னேற்றம் என்பவற்றில் மிகவும் கண்டிப்புடன் கவனமாகச் செயற்படுவார்.

அதிபர் அவர்கள் என்னுடைய முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை கொண்ட ஒருவராக விளங்கினார். எனது தந்தையின் அகால இறப்பின் போது எனக்கு ஆறுதல் சொல்லித் தேற்றியவர். எனது திருமணத்தின் போது தன் வீட்டு நிகழ்வு போல் முன்னின்று செயற்பட்டவர். அதிபரின் சேவைக்காலம் போர்க்காலச் சூழல் நிலவிய போதும் மாணவர்களின் பாதுகாப்பிலும், கல்விச் செயற்பாடுகளிலும் முக்கிய கவனம் செலுத்தியமையால் பெற்றோர்களின் நன்மதிப்பினையும், ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொண்டார்.

அதிபர் அவர்களின் இழப்பு அவரின் குடும்பத்திற்கு மட்டுமல்லாது, பாடசாலை சமூகத்திற்கும் எல்லோருக்கும் பேரிழப்பாகும். ஆயினும் காலத்தின் கட்டாயம் அதுவாகும். அதனால் அவரின் ஆத்மசாந்திக்காக ஆசிமட விநாயகரை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. சின்றல்லா யோகேஸ்வரன்**
முன்னாள் ஆசிரியர்
யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி எம் தாயே நன்றி!

திருநீறும் கோயில் நெற்றித்
திலகமும் புன்சிரிப்பும்
ஒரு நூறு ஆண்டின் மேலாய்
ஓங்கிய கல்விக் கோயில்
பணிதனில் உம்மைத் தோய்த்து
பதவியின் அழகுமாய் - எம்
விருப்பிற்குரிய தாயே! - எம்மால்
விடைதர முடியாதம்மா!

எங்களில் உயர்வு தாழ்வு
என்றும் நீர் கண்டதில்லை
எவர் மனம் நோகுமாறும்
எதிர் எதிர் மொழிந்ததில்லை
பணிவுடன் உறுதியாய் உம்
பணியிடை தடையை வென்ற
அதிசயம் உமது ஆற்றல்
ஆளுமை எமக்கோர் பாடம்

"இந்துவின் தீபம்" மற்றும்
இடம்பெயர் தேசத்தோர் - தம்
நெஞ்சிடைக் கொண்ட - ஊரின்
நினைவுகொள் 'பொழுது' மாகத்
தந்தபேர் உழைப்பின் மூலம்
தரம் உயர்ந்(து) எமது பள்ளி
இன்று நாம் காணும் கோலம் - உங்கள்
இதயத்தின் விருட்சம் அம்மா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் எல்லாம் தாம் வளர்த்த
கடமைகளின் உருவம் - என்றே
மேலிருந்து இன்றும் உம்மை
மிக விரும்பி வாழ்த்துகின்ற
'ஐயரின் திண்ணைப்பள்ளி"
அழகு கல்லூரி ஆகி
உள்ளமை தானும் - உங்கள்
உழைப்புக்கள் வழியே ஆகும்.

உங்களின் வீடு - பள்ளி
உறவுகள் யாபேருக்கும்
சொந்தமென்(று) உம்மைத் தந்தே
சோதனை பலவும் வென்ற
உள்ளமும் - உமது வாழ்வும்
இனிய சொல்- செயல்களாக
நல்வழிச் செலுத்தும் எம்மை
நன்றி எம் தாயே நன்றி!

**கவிஞர் நாக. சிவசிதம்பரம்**
அதிபர்
யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் இந்துவின் மூத்தவளே!

ஆண்டுகள் பல மண்ணின் தூண்டாமணியே!
பல சந்ததி நிமிர்ந்திட
பலமான விருட்சமாய்
விழுதுகள் பல தந்து
மெழுகாக ஒளியானவரே!
கற்கண்டு மொழிபேசும்
மார்க்கண்டு மாதரசியே - நின்
சொற்கேட்டு மலைகூட
கீழிறங்கி நின் அடி பரவும்
சாதாரண பள்ளியது இந்துவாக
சரித்திரம் பெற
சதா சேவை செய்த எங்கள்
தாயே நின் அர்ப்பணிப்பே
ஒளியாகி அறிவுளியாகி
வழியாகி வழிகாட்டிய எம்
அறிவுக் கோபுரம் அன்னையே
அர்ச்சிக்கிறோம் நின் பங்கஜமதில்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!! !

**திரு. சி. சுரேஷ்நாதன்**
**ஆசிரியர்**
**யா/ கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மனப்பதிவினில் அதிபரின் நினைவுகள்

மார்க்கண்டு ரீச்சர் என பெற்றோராலும் மாணவர்களாலும் அன்பொழுக அழைக்கப்பட்டவரே எங்கள் அதிபர்.

தோற்றத்தில் எளிமை

சிந்தனையில் தெளிவு

செயலில் நேர்த்தி

பதவியிலும் பணிவு

கோபத்திலும் கனிவு

தண்டிப்பதற்கு முன்பாக கண்டிப்பு

இவை தாம் மனப்பதிவினில் அதிபரின் நினைவுகளாக விரிகின்றன.

எப்போதுமே பாடசாலையில் தரித்திருத்தல்.

இலகுவில் அணுகக்கூடியவராக இருத்தல்.

எல்லோரையும் அரவணைத்துச் செல்லக்கூடியவராக இருத்தல்.

பக்கச் சார்பற்ற பக்குவமுடையவராக இருத்தல்.

சிறந்த ஆளிடைத் தொடர்பாடல்களைக் கொண்டிருத்தல்.

மாணவர்களின் மாறுபட்ட இயல்புகளுக்கு இசைந்து கொடுத்தல்.

தேவையறிந்து உதவிடும் பாங்கினைக் கொண்டிருத்தல்.

இவை யாபேரும் மெச்சும் அதிபரின் நிர்வாகக் குணவியல்புகள். கிட்டத்தட்ட மூன்று தசாப்தகால (1977-2005) இவரின் அர்ப்பணிப்பு மிக்க தொடர்ச்சியான வழிகாட்டுதலின் கீழ் கோண்டாவில் இந்து பெற்ற உயர்வு மட்டங்கள் ஏராளம்!

இவரது புனிதப் பணியால்

சிறந்த மனித விழுமியங்கள் - நல்லொழுக்கம்

சிறந்த கல்வியறிவு

சீரிய ஆன்மீக வளர்ச்சி மிக்க நன் மாணாக்கர்களை சமூகம் பாராட்டும் வகையில் உருவாக்கித் தந்தார் என்றால் மிகையல்ல.

"வளர்க அவர் புகழ் நாமம்"

மாணவன்

**வைத்தியர் பொன்னுத்துரை ஜெசிதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அம்மையார்

அன்பிற்கு இலக்கணமாய் அவனியிலே வாழ்ந்து பண்புடைமை காத்து, பல்லாயிரக்கணக்கான விழுதுகளை உருவாக்கிய அமரர் செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்களின் இழப்பானது கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட ஓர் பேரிழப்பாகும்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க அன்னாரின் வாழ்க்கை அமைந்திருந்தது.

நேற்றிருந்தார் இன்றில்லை எனும் இயல்வை உள்வாங்கி நிற்பது தோற்றமும் மறைவும் இவ்வுலக நியதி. எனினும் சிலரது இழப்பு எம்மனதைக் கதிகலங்க வைக்கிறது. அந்த வகையில் அமரர் செல்வி பா. மார்க்கண்டு அம்மையாரின் இழப்பும் எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது.

கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அவர்கள் யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று, அங்கு ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக பல வருடங்கள் சேவையாற்றினார். தனது வாழ்க்கையின் முக்கால் பங்கினை அல்லும் பகலும் பாடசாலை வளர்ச்சிக்காகவே செலவிட்டார்.

அமரர் அவர்கள் பாடசாலைக்கு காலடி எடுத்து வைத்தபோது இருந்த மிகக் குறைவான வளங்களைக் கொண்டு சிறந்த முறையில் நிர்வாகம் செய்து, பாடசாலையினைப் படிப்படியாக முன்னேற்றி, இன்று நிமிர்ந்து நிற்கும் கட்டடங்கள், மைதானம், பௌதிக வளங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்த பெருமை அமரர் அவர்களையே சாரும். இன்றைய பாடசாலை யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியாக விளங்குவதற்கு அடித்தளமிட்டவர் அமரர் செல்வி பா. மார்க்கண்டு அவர்களே என்பது அனைவரும் அறிந்ததே.

அம்மையார் தனது குடும்பத்தை மிகச்சிறந்த முறையில் வழி நடாத்தியது மட்டுமல்லாமல் தமது கிராமத்தின் முன்னேற்றத்திற்காகவும், ஆலயங்கள், சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்காகவும் பெரும் பங்காற்றினார். அன்னார் அவர்கள் கல்விச் சமூகத்திற்கு ஆற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையானது அளப்பெரியது. அவரின் அன்பான பேச்சும், பண்பான விருந்தோம்பலும், நேரான சிந்தனையும் அவரின் தனித்துவத்தைக் காட்டும் அம்சங்களாகும். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக, தனக்கென தனித்துவமான பேச்சாற்றலும் சிறந்த நிர்வாகத் திறமையும் கொண்டவர் அமரர் பாக்கியலட்சுமி அவர்கள். எம்மாலும் எதனையும் சாதிக்கமுடியும் என்ற மனத்தைரியத்தை என் மனதில் வரவைத்தவர் அமரர் அவர்களே.

அமரர் அவர்கள் உறவினராக இருந்தபோதிலும் அன்ரி என்று அழைத்ததைவிட ரீச்சர் என்று அழைத்ததே அதிகம். அம்மையார் இட்ட ஆரம்ப அடித்தளமும், அவரின் அறிவுரைகளும், தலைமைத்துவப் பண்பும் முன்மாதிரியான செயற்பாடுகளுமே நாம் இன்று எமது துறைகளில் சிறந்து விளங்குவதற்கு காரணம்.

அமரர் செல்வி பா. மார்க்கண்டு என்ற ஆலமரம் அடிசாய்ந்துள்ள போதிலும் அதிலிருந்து விழுதுவிட்ட பல விருட்சங்களாக அன்னாரின் வழிகாட்டலில் வந்த மாணவர்கள் பலரும் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கி அன்னாரின் பெருமையை நிலைநாட்டு கின்றனர். அமரர் அவர்கள் கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும், அனைவரின் உள்ளத்திலும் அவர் எந்நாளும் நிலைத்திருப்பார்.

இறப்பு எனும் இயற்கையின் நியதிக்காய் கல்மனம் படைத்த காலனவன் "கொரோனா" எனும் வடிவில் வந்து அன்னாரின் உயிரைப் பறித்தெடுத்துவிட்டான். அன்னாரின் சிரித்த முகத்தைக் காணவும், தரிசிக்கவும், சுமக்கவும் பலநூறு பேர் காத்திருந்த வேளையிலே, யாருக்கும் கடுகளவேனும் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடாதென நினைத்த அம்மையார் தனியாகச் சென்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் அந்த சிரித்த முகத்தையும், இறுதிப் பயணத்தையும் காணமுடிந்தது என்ற ஆத்ம திருப்தியோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பதற்கிணங்க அமரர் அவர்கள் விண்ணுலகில் தேவர்களுள் ஒருவராகப் போற்றப்படுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்

மாண்டார் வருவதில்லை" எனும் நியதியில் நாமும் தேறி, அன்னாரின் ஒரு வருட நினைவு தினத்தில் அம்மையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அமரரின் இழப்பைத் தாங்கும் சக்தியும், அமரரின் ஆசியும் அவரது குடும்பத்தாருக்கு கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அம்மையாரின் வழிகாட்டலில்
Dr. K. சாஜிபானு
வைத்தியர் யாழ். போதனா வைத்தியசாலை

**நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம் ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக்கொள்ள ஒரே மாதிரியான வாய்ப்புகள் உள்ளன.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு ஒன்று நிறைந்தாலும் என்றும் அழியா நினைவுகளோடு அமரர் பா. மார்க்கண்டு

## ( முன்னைநாள் அதிபர், யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி )

எமது பாடசாலையின் அதிபர்கள் வரிசையில் இமயம் போல் விளங்கியவர்.

எமது பாடசாலையிலே கல்வி கற்று ஆசிரியராக, அதிபராகி நன்மாணவ சமுதாயத்தை உருவாக்கியவர். புன்புறுவல் பூத்த வதனம், கண்டிப்புடன் கூடிய கனிவான வார்த்தை அனைவரையும் சமநோக்கும் பண்பு, அனைவரையும் இலக்கு நோக்கி நகர்த்தும் சாமர்த்தியம் யாவும் ஒருங்கமைந்த ஆளுமையாக விளங்கியவர் எங்கள் அதிபர் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய செல்வி பா. மார்க்கண்டு அம்மா அவர்கள்.

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்பதிற்கிணங்க வாழ்ந்த பெருந்தகை. யா/ கோண்டாவில் இந்துவின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய பெருமைகொள் பெண்மணியாவார். இவரது காலம் கோண்டாவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலம் என்றால் மிகையாகா.

அன்னாரது இழப்பு ஈடுசெய்யமுடியாதெனினும் காலத்தின் நியதியை கருத்திற்கொண்டு அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரது ஆத்மா இறைவன் திருவடி சேர எல்லாம்வல்ல சிவப்பெருமானைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் அழியா நினைவுகளோடு
இளம் சைவப்புலவர், தமிழ் சொல்லருவி,
தெய்வத்தமிழ் செம்மல், தெய்வத்தமிழ்ச்சுடர்,
சைவசன்மார்கர், சைவசின்மயர்,
சிவநெறிச்செம்மல்
**ச. நவநீதன்** (B.FA, B.A, M.A, PGDE)
ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
(க.பொ.த சாதாரண தரம் 1994, யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கண்டேய பதம் பெற்ற அதிபருக்கு எம் மனக்கண்களின் நினைவஞ்சலி

கோண்டாவில் பெற்றெடுத்த கோமகள்
கொள்கையுடன் வாழ்ந்த நாமகள்
ஆசிரியப்பணியின் பெருமாள்-எம்
இந்துக்கல்லூரியின்
வரலாற்று பெருமகள்
இறப்பு செய்தி உண்மையா?
நம்ப மறுக்கிறது மனம்

காற்றில் வந்த செய்தி
கனவாகிப் போகாதா?
நேற்றிருந்த எம் அதிபர்
நேரில் வாராரோ?
பூத்திருந்த வதனம் - மீண்டும்
மலராதோ-அதிபரே
காத்திருக்கின்றோம்
காலன் கைநழுவி வாருங்கள் - எம் முன்னே

கோண்டாவில் இந்துவின் மாணவியாய் ஆசிரியராய்
பின்னாளில் அதிபராய் ஆளுமை கோலோச்சி
பண்புடன் படிப்பும் நல்
பழக்கவழக்கங்களும் கற்பித்தீர்
குறும்புகள் நாம் செய்தபோதும்
குற்றங்காணாது வழிப்படுத்தினீர் - உம்
நிழலில் பயின்ற பல்லாயிரம் நாற்றுக்கள் இன்று பூத்துகுலுங்குகின்றன
உன் தயவாலே

பழைய மாணவன்
**இ. ஜெயகரன்**
உப தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத அதிபரம்மா

போர் மேகங்கள் சூழ்ந்த நேரம், பலவகை அதிகார அழுத்தங்கள், குறுகிய இடம், தளபாடப் பற்றாக்குறை, இடப்பெயர்வுகள் அதிகரிக்க மாணவர் தொகையும் அதிகரிக்கின்றது. எவ்வகை சவால்களையும் எதிர்கொண்டு துணிவுடன் முகம் கொடுத்து தீர்வு கண்ட ஒரு திறன்மிக்க நிர்வாகி செல்வி பா. மார்க்கண்டு அம்மையார். அந்நேரம் எம்மை எல்லாம் கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றி, அறிவூட்டி, நெறிப்படுத்தியதன் பயன் இன்று நாம் சமூகச் செயற்பாடுகளில் முன்நிற்கின்றோம். எம்மால் மறக்கமுடியாத அதிபரம்மாவிற்கு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலியைச் செலுத்துவோமாக.

**ப. சசீஸ்காந்த்**
தலைவர்,
சமூக அபிவிருத்திக்கான செயற்பாட்டு மையம்,
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட இணைப்பாளர்
"பவ்ரல்" தேர்தல் கண்காணிப்பு அமைப்பு.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு,
யாழ். மாவட்ட இணைப்பாளர்.

செயலாளர்,
விவசாய சம்மேளனம்,
கோண்டாவில் தென்மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

"மாதா, பிதா, குரு, தெய்வம்" எமது சிறுவயதில் நாம் படித்த வாசகம். இதில் குரு என்பவர் பெற்றோருக்கு அடுத்ததாக எமது நலனில், வளர்ச்சியில் அக்கறை உள்ளவர் ஆவார். அந்த பொருளுக்கு இலக்கணமாக, உதாரணமாக வாழ்ந்தவர் தான் எங்கள் அதிபர். பாக்கிலட்சுமி மார்க்கண்டு அவர்கள்.

அவருடைய காலத்தில் நாம் கோண்டாவில் இந்துக் கல்லூரியில் படித்தது எமக்கு கிடைத்த வரம் என்று கூறலாம்.

எங்கள் ஆசிரியர் தன்னுடன் பணியாற்றிய சகல ஆசிரியர்களுடனும் இன்முகத்துடன் பழகும் விதம் சிறப்பானது. எந்நேரமும் எமது பாடசாலையின் உயர்வும் வளர்ச்சியும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டார்.

மாணவர்களது கல்வித் திறமை, விளையாட்டுத் திறமை, கலைத்திறமை போன்றவற்றை இனங்கண்டு ஊக்கமளித்து வளர்ப்பதில் நேர்த்தியானவர்.

எந்தவிதமான பாகுபாடற்ற மனத்துடனும் விசுவாசத்துடனும் பணியாற்றிய ஓர் ஆசிரியர், அதிபர் ஆவார். எங்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது நீண்டகாலமாக இயங்காநிலையில் இருந்தது. அதனை அதிபர் அவர்கள் மீளவும் இயங்கச் செய்து அதன் மூலம் பாடசாலையின் வளர்ச்சியை மேம்படுத்தினார்.

நாங்கள் பாடசாலை விட்டு வெளியேறிய பின்பும் எங்கள் நலன், வளர்ச்சியில் அக்கறை காட்டிய அதிபர் ஆவார். அவரின் இழப்பு எங்கள் பாடசாலைச் சமூகத்திற்கு பெரும் இழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்.

"எங்கள் அதிபர் என்றும் எம்முடன்"

என்றும் மாணவனாக

**தி. ரமேஸ்கரன்**

உரிமையாளர் 'யதுசன் காகிதாதிகள்,

கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியா நட்சத்திரமான எம் அதிபரே!

ஆதவனாய் ஒளிதந்த அதிபரே
ஆலமரமாய் நிழல்தந்த அதிபரே
கல்வி என்னும் கடலில் கால் நனைத்த வேளை
கட்டுமரமாய் எம்மைத் தாங்கி நின்றீரே
கலங்கரை ஒளிநோக்கி கரை சேர்த்து விட்டீரே

எம் திறன்களை அறிந்து வழிப்படுத்திய முதல்வரே
எம் பயணப்பாதையைச் சீரமைத்த பெருந்தகையே
நேரிய குணத்தினால் எம் நெஞ்சகத்தில் உறைந்தவரே
இன்று நாம் தலைநிமிர்ந்து நிற்க
அன்று உரமிட்டு வளர்த்து விட்டீரே

எங்களின் உயர்ச்சிக்கு ஒளியாய் நின்றவரே
உங்களால் நாம் உயர்வடைந்தோம் அம்மா
வானத்து நீலமாய் எம் வாழ்வில் உறைந்தவரே
வானத்தில் இறைவனுடன் நீர் நித்தியத்தில் நிற்க
வையகத்தில் உமக்காக இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

**இ. இரத்தினராஜ்**
முகாமையாளர்
இலங்கை வங்கி, பருத்தித்துறை.

**கனவு காணுங்கள் ஆனால்**
**கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது இல்லை**
**உன்னை தூங்க விடாமல் பண்ணுவது எதுவோ**
**அதுவே கனவு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு

என் அருமை அதிபரே!
எம்மை ஆசை ஆசையாக பாடங்களைக் கற்கவைத்து
எம்மை ஆளுமை உள்ளவர்களாக வளர்த்த அன்புத் தெய்வமே!
ஓராண்டு ஒரு நொடியாய் ஓடி மறைந்தாலும்
ஒவ்வொரு விநாடியும் ஆறவில்லை எம் துயரம்,
உங்கள் எழில் முகம் காணத் துடிக்கின்றது எம் இதயம்
காலை மாலை என்றில்லாது எம் கல்வி வளர்ச்சிக்கு
கனவிலும் நினைவிலும் நிறைந்து எம்மை
ஆளுமை உடையவர்களாக அதிபரே!
தங்கள் வாழ்க்கைப் பயணங்களை கல்விப்பாதையில்
அர்ப்பணித்த பெரும்தகைமைக்குரிய செல்வி பாக்கியலட்சுமி
மார்க்கண்டு அதிபர் அவர்களே! இன்றும்
நம்மில் பலபேரது கல்விப் பயணத்திற்கு வழிகாட்டி
தடங்களாய் நீண்டு செல்வது தங்கள் தகைமையின் உயர்வே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி விஜயதீபன் கஜநிதி**
நூலகர்
பொது நூலகம் - கோண்டாவில்
நல்லூர் பிரதேச சபை.

**வெற்றி பெறவேண்டும் என்ற பதற்றம் இல்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் செல்வி பா. மார்க்கண்டு (அதிபர்)

யாழ். கோண்டாவில் இந்துக் கல்லூரியில் பேரான நன்மக்களை நன்னிலைப்படுத்தி வஞ்சமில்லா அன்பினை வான்மழைபோல் பொழிந்து மாணவர்களை சொத்தாகப் பேணிப் பார்த்து எம்மை அன்போடு அரவணைத்து பேர் விருட்சமாக எம்மை வளர்த்து ஆனந்தமாய் வாழவைத்த உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பழைய மாணவி

**அ. ஆரணியா**

அபிவிருத்தி உத்தியோகத்தர்

கல்வி அமைச்சு, வட மாகாணம்.

## புனிதம் பெறட்டும்

எண்ணங்களில் நிறைந்திருக்கும் எம் ஆசானே! அதிபரே உங்கள் நினைவுகள் என்றும் எம் மனங்களில் மகுடம் தரித்திருக்கும். நீங்கள் சென்ற இடம் புண்ணியமாய்ப் புனிதம் பெற எல்லா வல்லமைகளையும் இரு கரம் கூப்பி வேண்டுகிறோம்.

பழைய மாணவன்

**தவரூபன்**

ரூபன் ஸ்ரூடியோ, வீடியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி கண்ட அன்னை

ஆளுமை மிக்க அன்னையே
கோண்டாவில் இந்துவின் அன்னை
நீர் இன்று பூமியில் விதைக்கப்பட்ட
நாளின் அன்பு கண்ணீர் துளிகளுடன்
அம்மா உங்கள் அரவணைப்பில்
வழிகாட்டலில் 13 ஆண்டுகள்
கோண்டாவில் இந்துவில் கல்வி கற்று
ஆலமரமான உங்களில் இருந்து வந்த
விழுதுகள் நாங்கள் இன்று ஒரு
விருட்சமாக வந்துள்ளோம் - உமது
வாழ்நாட்களை எமது
பாடசாலைக்காக அர்ப்பணித்து உயர்
தர வகுப்பினை அறிமுகம் செய்து
அதில் வெற்றிகண்ட அன்னையே
தலைமைத்துவத்திற்கு இலக்கணமாக
வாழ்ந்த அன்னையே கோண்டாவில்
கிராமத்திற்கும் உங்கள்
குடும்பத்திற்கும் எமக்கும்
பெருவிருட்சமாக வாழ்ந்த ஆளுமை
மிக்க முதல்வரே என்றென்றும்
உம்மை நினைத்திருப்போம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**திருமதி விமலினி நவநீதன்**
ஆசிரியை
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்மைப் புடம்போட்ட அதிபர்

க.பொ.த. (உ/த) இல் கல்வி கற்கவந்த எம்மை அரவணைத்து உயர்த்திவிட முனைந்தீர்கள். ஒழுக்கத்தைக் கற்றுத் தந்தீர்கள். உங்கள் சிரித்த முகமும், அன்புகலந்த கண்டிப்பும் எம்மைப் புடம்போட்டன. இன்று வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்களாக, தலை நிமிர்ந்து நடமாட வைத்து விட்டு நீங்கள் நிரந்தர உறக்கத்துக்குச் சென்றுவிட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்திபெற கடவுளை இறைஞ்சுகின்றோம்.

**ந. சிந்துஜன்**
உரிமையாளர்,
றஞ்சன் வெல்டிங்.

**செ. துவாரசன்**
ஆய்வுகூட உதவியாளர்,
உற்பத்தி தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## பொற்கால அதிபரே சென்று வாருங்கள்

ஒன்றுமுதல் பதினொன்று வரை கல்வி கற்று சிறப்பான சித்தியுடனும் மனக் கவலையுடனும் நான் உயர்தரத்திற்கு வேறு பாடசாலை செல்ல நேர்ந்தது. உங்கள் வழிகாட்டலை அங்கும் பின்பற்றினோம். எனவே அங்கும் அதிபராக மனக்கண்ணில் நீங்கள் இருந்தீர்கள்.

எங்கள் மனக்கவலை உங்களுக்கும் இருந்ததனால் உயர்தரத்தை கோண்டாவில் இந்துவில் ஆரம்பித்து உயர் பாடசாலை ஆக்கி எங்கள் இதயத்தில் உயர்ந்தீர்கள். வெற்றியுடன் விடை பெற்றீர்கள். கோண்டாவில் இந்துவின் பொற்கால அதிபரே சென்று வாருங்கள்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**த. ஜெகன்**
உரிமையாளர்,
நவா அலுமினியம் பிற்றிங்,
தாவடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிப் பா

சென்றுவிட்டாள் செல்வி மார்க்கண்டு
மண் உலகில் மலர்ந்தபோது அவள்
பெயர் ...................
மண்ணில் நின்றபோது மாண்புறக்
கல்வி கற்றாள், கலை பெற்றாள்
கற்ற பின் நின்றாள் அதற்குத்தக
பெற்றதைப் பூமிக்குக் கொடுக்க வேண்டும்
வந்த கடனை ஆற்ற வேண்டும்
தென்றல் வந்து கொடியை கேட்டா தழுவுகின்றது
நதி வந்து நாணலைக் கேட்டா நனைக்கின்றது
மழை வந்து யாரைக் கேட்டு பூ இதழ் மேல் விழுவதற்கு
அம்மையும் அப்படித்தான்
கற்றதைக் கொடுக்க ஆசான் ஆனாள்
அதிபர் ஆனாள்
ஒழுக்கம், நேர்மை, அன்பு, அறிவு, பண்பாடு நிறைவு
இவை தானே மானுடம்
இவை முற்றும் கொடுத்தாள்
அன்புடன் கண்டிப்பும் உண்மையும்
பொதிந்த தாய்
வருவதும் போவதும் போவதும் வருவதும்
உலக நாடக வழக்கம்
இருந்தவர் நடத்திய நாடகம் - அவரது
வருகையின் தரம் சொல்லும் ....
இம்மையில் அறத்தில் வாழ்ந்திடல்
மறுமை இன்பத்தின் கதை பேசும்
அறமே வாழ்வெனின் அரனின் பாதங்கள்
மெல்லச் சிரித்தழைக்கும்
அறமாய் வாழ்ந்தவள் அறத்தில் நிலைத்தவள் ....
அம்மை காரைக்கால் அடியினையொற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தன் திருவடி பற்றி அன்னை
பேரானந்தம் பெறட்டும்.

**அன்னையின் அரவணைப்பில் கற்ற**
**பழைய மாணவர்கள்**
குமரகோட்டம், கோண்டாவில்.

# கண்ணீரில் நனைகின்றோம்...

கல்விக்கண் திறக்க வழிசெய்த குருவே....
அறப்பணிகள் பல செய்து
ஆளுமை கொண்டு வாழ்ந்து
செம்மையாக நாம் வாழ செல்வியாக வந்தீரே....
கோண்டாவில் மண் பெருமை கொண்டது .....
மாணவ செல்வங்களை கண்டித்து நின்றதன் பயன்
எதிர்காலத்தில் திறம்பட வாழ வழி செய்தது .....
இன்று நினைக்கிறோம் தங்களை ......
கண்ணீர் நனைக்கிறது எங்களை.....
என்றும் நினைவோடு வாழும்

1999ம் ஆண்டு க.பொ.த. (சா/த) மாணவர்கள் சார்பாக
**திருமதி. வி. ஜெனனி**
நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிப்பும் அரவணைப்பும் தந்த அதிபர்

நாம் மாணவர்களாய் கல்வி கற்கும்போது எம்மை அரவணைத்து நல்வழிப்படுத்துவார். தவறுகள் சுட்டித்தனமாகச் செய்யும்போது கண்டித்து அரவணைப்பார். எமது உயர்வே கனவாக சேவைக்காலம் முழுவதும் செயற்பட்டவர். இடப்பெயர்வுகள் காரணமாக மாணவர் தொகை அதிகரித்த போதும் பாடசாலைச் செயற்பாடுகள் அனைத்தையும் நடாத்தி எம்மைப் பங்குபற்ற வைத்து எமது ஆளுமையை விருத்தி செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். எம்மை வளர்த்துவிட்ட ஆசிரியர்களை நெறிப்படுத்தி சந்தோசகரமான கற்பித்தலையும், கற்றலையும் ஊக்குவித்த எமது அதிபர் செல்வி. பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்களின் அமரத்துவம் எமக்கிடையே ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது. அன்னாரின் ஒரு வருட பூர்த்தியில் வெளியாகும் நினைவுமலரில் எனது அஞ்சலியைச் செலுத்தக் கிடைத்த வாய்ப்பு பெரும் பேறாகும்.

**திருமதி. R. கயல்விழி** (B.A)
(Adv. B.T.H.D in India,
Higher Diploma in B.T.HD)
Mayil Beauty Care & Modeling Studio
பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

- **உனது கற்பனையை முதலீடாக நீ வைத்தால் அது உனக்கு வாழ்க்கையில் பல வெற்றிகளைத் தேடித்தரும்.**
- **தோல்வி மனச் சோர்வைத் தருவதில்லை, மாறாக ஊக்கத்தையே தருகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் நிறைந்திருப்பீர்

கலைமகளின் புதல்வியரே - எம்
கல்லூரியின் தாயவளே
கோண்டாவில் குலம் தளைக்க
பிறப்பெடுத்த கோமகளே
இரக்கத்தின் உருவமதாய்
ஈகையின் இருப்பிடமாய்
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் நின்றவரே
தனையழைத்த நிகழ்வுகளில்
கலந்து சிறப்பித்தவரே.....

பாடமது கற்கவென
பள்ளி வந்த வேளையதில்
பாலர் எமை வரவேற்று
பாதியிலே வழிதவறி
பாதகர் கை சேர்ந்திடாமல்
பண்புடமை காத்தவண்ணம்
பக்குவமாய் எடுத்துரைத்து
பாரினில் யாம் சிறந்து வாழ
வழிவகைகள் செய்து தந்தீர்.....

அன்பின் இலக்கணமாய்
அறிவின் சுடர்விளக்காய்
அமைதியின் உருவமதாய்
அடக்கத்தின் இருப்பிடமாய்
பண்பில் பெருந்தகையாய்
பாசத்தின் உறைவிடமாய்
பார்போற்றும் உத்தமியாய்
பள்ளியிலே சிறந்தோங்கி
கலங்கரை விளக்கதுவாய் - எமைக்
கரை சேர்த்த காரிகையே!!!

புவியிலுள்ள மாந்தரெல்லாம்
பதறும் வகை செய்துவிட்ட
பொல்லாத பிணியதுவாம்
கோரமிகு கொரோனா - எம்
வஞ்சமில்லா நங்கையதை
வாட்டி வதைத்ததுவாம்
பழியேதும் அறியாத
பாவையவள் பதைபதைத்து
மேனியது நிலைகுலைந்து
ஆவியது சென்றது காண்!!

எமையெல்லாம் கற்கவைத்து
ஏற்றம் காணச் செய்துவிட்டு
பெற்ற தாயினைப் போல
அகமகிழ்ந்து அன்னையவள்
ஊர் நீங்கிச் சென்றவேளை - இறுதி
ஊர்வலத்தில் கலந்து கொண்டு
உரிய மரியாதை
செலுத்தாத துக்கமது
ஆறாக ரணமதுவாய்
என்றும் எம் மனங்களிலே!!!

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீவீர்
விண்ணுலகம் சென்றாலும் - எம்
கண்விட்டு மறையாமல்
காலம் காலமதாய்
எங்கள் மனங்களிலே
இமைப்பொழுதும் நீங்காமல்
இதயத்தில் நிறைந்திருப்பீர்!!

**எஸ். சிவாகரன்**
தாதி அலுவலர்
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை நாயகி

மெழுகெனத் தன்னை உருக்கி
கல்வி ஒளிதனை மாணாக்கருக்குப் புகட்டி
நாநிலம் போற்றும் வண்ணம்
நாயகியாய் வாழ்ந்தீரே இவ்வுலகினிலே

கண்ணியம் கடமை கட்டுப்பாடு இவையாவற்றையும்
கண்டிப்புடனே கடைப்பிடித்து வந்தீரே
கோண்டாவில் எனும் கிராமத்தில்
கல்வித் தெய்வமாய் நீரும் இருந்தீரே

அன்புடனே அறிவுரைகளும் அவ்வவ் வேளைகளில்
தேவையான கண்டிப்பினையும் திகட்டாமல் தந்தீரே
மாணவர் மேன்மை நிலையடைய
மனதார வாழ்த்தி மகிழ்ந்தீரே

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின்
அதிபராய் கல்விச்சேவை செய்தீரே
சாதனைகள் பல புரிந்து மாணவர்களை
சாதனை நாயகராய் உருவாக்கினீரே

வைத்தியர்கள், பொறியியலாளர்கள் சட்டத்தரணிகளென
பல்துறை விற்பன்னர்கள் உருவாகிட
அடிப்படை அறிவுதனைப் புகட்டி
அவர்களுக்கு அத்திவாரமாய் விளங்கினீரே

போர் மேகங்கள் சூழ்ந்த காலத்திலும் - ஓர்
பெண்மணியாய் பொறுப்புடனே பணியாற்றி
சாதிக்க முனைந்த மாணவர்களை
சாதனை வீரர்கள் ஆக்கினீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால ஓட்டத்தின் காலன் செய்த வேலையால்
எம்மை விட்டு நீர் பிரிந்து சென்றாலும்
உம் பணியினை என்றும் நாம் மறவோம்
காலமெலாம் கல்வித் தெய்வமாய் வீற்றிருப்பீர்
உறங்குங்கள் நிம்மதியாய் உறங்குங்கள்
சரித்திரம் படைத்திட்ட சாதனை நாயகியே.

**சொர்ணலிங்கம் தருமதன்**
சட்டத்தரணி

## இதய அஞ்சலி

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் பலதுறை வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வெற்றிகண்ட கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் அமரர் செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்களின் மறைவு கல்லூரிச் சமூகத்திற்கு மட்டுமல்ல, அவர்தம் குடும்பத்தினர்க்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திப்பதுடன் கல்லூரிச் சமூகத்தினர்க்கும் அவர் வளர்த்தெடுத்த பெறாமக்கள் குடும்பத்தினர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்ந்து கொள்கின்றேன்.

**சபாபதி இராஜ்குமார்**
இலண்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பிற்குரிய அதிபர்

ஆலமரமொன்று அடி
சாய்ந்ததோ வேரோடி
விழுதுவிட்ட பெரு
விருட்சமே எமை பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே
போனதேனோ

வானத்து நிலவாய் வலம்
வந்து கல்விக்கு அரும்பணியாற்றிய
அற்புதமே இப்பிறவியில்
அல்ல எப்பிறவியிலும்
யாம் காணோம் உமைப்
போன்ற அருமருந்தை

காலதேவன் எம்
ஊருக்கு உவந்தளித்த
உத்தமியே நீரின்றி
தவிக்கும் எம் நிலைமை
பாரும் இனி இப்புவியில்
நாம் எப்போ உம் முகம் பார்ப்போம்

இருந்தாலும் மறைந்தாலும்
பெயர் சொல்ல வேண்டும்
எம் அதிபர் மார்க்கண்டு
அம்மா போல யார் என்று
ஊர் சொல்ல வேண்டும்.

என்றும் அன்பிற்குரிய
மாணவனாகவும் மாணவியாகவும்
**திரு. திருமதி. சுகந்தன் சுந்தர்யா**

**விற்பனைப் பிரதிநிதி**
**"ஹேலீஸ் அக்ரிகல்சர்"**
**கோல்டிங் லிமிடெட்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் இந்துவின் பாக்கியமே...

கட்டைத்தடி கொண்டு
கட்டையாய் ஒரு உருவம்
கடகடவென சுற்றித்திரியும்
கண்டு கொண்டால் நடுநடுங்கும்

கண்ணியமான கண்டிப்போடு
கண்ணை இமை காப்பது போல
கற்ற மாணவர்கள் அனைவரையும்
காத்து வந்த எம் தாயே

கோண்டாவில் இந்துவின் பொற்காலமென
கண்டவரெல்லாம் சொன்னதுண்டு
பாக்கியலட்சுமியே நீ இருந்த காலமெல்லாம்
மாணவர்கள் நாம் பெற்ற பாக்கியமே

அழியாச் செல்வந்தனை அள்ளி வழங்கிய உத்தமியே
ஆண்டாண்டு காலமானாலும் அழியாது உம் சேவை
அகிலத்திலே தடம்பதித்து நிற்கின்றோம்
அன்னையே என்றும் உம் நினைவோடு....

2000ம் ஆண்டு O/L மாணவர்கள் சார்பாக

**உ. வதனராஜ்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

நான் கற்ற கோண்டாவில் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்து எம்மை நல்வழிப்படுத்தி இந்நிலைக்கு ஏற்றிவைத்த செல்வி. பா. மார்க்கண்டு அம்மாவிற்கு கண்ணீரைக் காணிக்கையாகச் செலுத்துவதைத் தவிர யாதொன்றும் அறியேன்.

**செல்வி. அ. கசிலினி**
ஆங்கில ஆசிரியை
மு/ கரிப்பட்டைமுறிப்பு அ.த.க. பாடசாலை

# அஞ்சலி செய்வோம்

நான் கோண்டாவில் இந்துவில் கல்வி கற்ற காலம் என் பொற்காலமாக நினைக்கின்றேன். அவ் உணர்வை ஏற்படுத்தித் தந்த என் அதிபர் செல்வி. பா. மார்க்கண்டு அம்மாவிற்கு அஞ்சலி செய்கின்றேன்.

**த. கலீசன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
உடுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா ஆசீர்வதியுங்கள்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து, மண்ணில் எம்மை மாண்புற வைத்து பெருமை கொண்ட எம் அதிபர் செல்வி. பாக்கியலட்சுமி மார்க்கண்டு, கோண்டாவில் மண் போற்ற சேவையின் சிகரமாகி நிறைவுடன் ஈசன் கழலடி சேர்ந்தார். அங்கிருந்து எம்மை ஆசீர்வதிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

**ப. பிரதாபன்**
அதிபர்,
யா/ வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கால யாழ்ப்பாணம்
## ஒரு பிராரம்ப தொல்லியலாய்வுக் குறிப்பு



**கலாநிதி செல்லையா கிருஷ்ணராசா**
( வாழ்நாட் பேராசிரியர் - வரலாற்றுத்துறை )

### ஆய்விற்கோர் அறிமுகம்

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 48 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் **கற்கால யாழ்ப்பாணம்** தொடர்பான சடப்பொருட் சான்றுகளை நம்பிக்கை கொள்ளக்கூடிய வகையில் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளமையையிட்டு ஆறுதலடைய முடிந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் வரலாற்றுக்கு முற்பட்ட பண்பாட்டு மையங்களை இனங்கண்டு, அவற்றினை ஆராய்ந்து, சடப்பொருட்பண்பாட்டுச் சான்றுகளைப் பெற்று, வரலாற்றிற்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தீபகற்பத்தின் இருப்புத் தொடர்பான தேடலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைவதற்கு ஓர் அரை நூற்றாண்டு காலம் எமக்குத் தேவைப்பட்டுள்ளது. இவற்றிற்கும் மேலாக **கென்னத் கென்னடி** போன்று அத்துறையில் அனுபவம் பெற்ற வெளிநாட்டு ஆய்வு அறிஞர்களின் கருத்துக்களுக்கு மாற்றீடாக சான்றுகளை முன்னிறுத்தி, **மதுரைக்குத் தெற்கே பழங்கற்கால யுகம் ஒன்று இலங்கையின் வடபகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது** என்பதனை வெளியுலகிற்கு பிரகடனப்படுத்துவது என்பது மிகக் கடினமான ஒன்றாகவும் உள்ளது. இருப்பினும் விடாமுயற்சியுடன் சேகரிக்கப்பட்ட தொல்லியல் தடயங்களுடன் முன்வைக்கப்பட்ட யாழ்ப்பாணக்குடாநாட்டின் கற்காலத்தின் இருப்புப் பற்றிய திட்டவட்டமான முடிவுகளுடன் இவ்வாய்வுக் கட்டுரையை இங்கு அமைக்க முடிந்துள்ளது. 1979 இல் தொடங்கப்பட்ட இவ்வாய்வு முயற்சியானது பல்வேறுகாரணங்களினால் இடைவிட்டு-தடைப்பட்டு, **தடைப்படுத்தப்பட்டும்,** தளராநிலையில் இன்றைய சூழலில் நம்பிக்கை தரும் வகையில் யாழ்ப்பாணத்து **கற்காலம் பற்றிய இருப்பினை அடையாளப்படுத்தக்கூடிய வகையில் ஒரு பிராரம்ப தொல்லியலாய்வு முடிபுகளுடன் அவற்றினை அத்துறையில் அனுபவம் பெற்ற உள்நாட்டு — வெளிநாட்டு ஆய்வாளரின் கவனத்திற்குள் கொணர்ந்து, நன்கு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இவ்வாய்வுக்கட்டுரையை யாழ்ப்பாணக்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடாநாட்டின் கற்காலம் தொடர்பாக வரைய முடிந்துள்ளது.** தென்னிலங்கைத் தொல்லியலாளர்களும் யாழ்ப்பாணத்து கற்காலம் பற்றிய மூலாதாரங்களை பரிசீலனை செய்துள்ளதுடன் அதன் இருப்பினையும் வெளிப்பாட்டினையும் விஞ்ஞானபூர்வமாக வெளிக் கொணர்வதற்கான ஒத்துழைப்பினையும் இற்றைவரைக்கும் நல்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். **யாழ்ப்பாணத்தில் கற்காலம்** என்ற தலையங்கத்தில் வெளிவரும் இவ்வாய்வுக்கட்டுரையை வாசிக்கும் எமது மூத்த கல்வியாளர் தலை முறையினருக்கு ஓர் அதிர்ச்சியான வரலாற்றுச் செய்தியாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பூர்வீக வரலாறு தொடர்பாக அதனை எதிர்கொள்ளும் நிலையில் காணப்பட நேரிடினும். யாழ்ப்பாணத்தீபகற்பத்தின் வரலாற்று வளர்ச்சியோடு தொடர்புபட்ட மூலாதாரங்களின் மீதான அணுகு முறை மாற்றத்தினையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவேண்டும். 1981இல் ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியினால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்று உதயகால எழுத்தியலில் **( Historiography of proto History**) ஏற்பட்ட மாற்றங்கள் போன்று **மாயக்கையிலும் மயிலிட்டியிலும் காரைக்காலிலும்** மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் பலனாக யாழ்ப்பாணக்குடாநாட்டின் **கற்காலக்குடியேற்றங்கள்** தொடர்பான குறிகாட்டியாகக் கிடைத்த கல்லாயுதங்கள் என உறுதிப்படுத்தப்பட்ட தொல்லியல் மூலாதாரங்களைப் பெற்றதினூடாக யாழ்ப்பாணக்குடா நாட்டின் மக்கட்பரப்பியல் வரலாற்றினை பலநூறாயிரமாண்டுகளுக்கு முன் உள்ள நிலைக்கு கொண்டு செல்லமுடிகின்றது. இந்தவகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கற்காலக் கல்லாயுதங்களின் கண்டுபிடிப்பானது மூன்று நிலைகளில் காணப்படுவதானது குடாநாட்டிற்கு வெளியே இலங்கைத் தீவிற்கு மாத்திரமல்லாது ஒட்டுமொத்த தென்னாசிய வரலாற்றிற்கே பாரிய வரலாற்று மாற்றத்திற்குரிய சவாலாக அமைந்துள்ளது.

## ஆய்வில் இடையீடுகள்

யாழ்ப்பாணக்குடாநாட்டின் கற்காலம் பற்றிய தொல்லியல் ஆய்வில் கடந்த காலங்களில் பல இடையீடுகள் ஏற்பட்டிருந்தன. 1979ஆம் ஆண்டி லிருந்து கற்காலம் பற்றிய தொல்லியல் கண்டுபிடிப்பு முயற்சிகளுக்கு சாதகமான மூலாதாரங்கள் கிடைத்திருந்தபோதும் **Dr.கென்னத் கென்னடியின் ஒரு கோட்பாட்டினை மந்திரக்கோலாக – அளவீடாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டி மதுரைக்குத் தெற்கே பழங்கற்காலப் பண்பாடு நிலவவில்லை – இருக்கவும் முடியாது** என எமது "புகழ் பெற்ற தொல்லியலாளர்கள்" வற்புறுத்தி வந்திருந்தமையின் காரணத்தினால் எமது ஆய்வு முயற்சிகளை சிறிது காலம் முற்றாக கைவிடவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டோம். அதிர்ஸ்டவசமாக எம்மால் முன்னர் சேகரிக்கப்பட்டிருந்த **கற்காலக் கருவிகள்** என நம்பப்பட்ட தொல்லியல் எச்சங்களை இடப்பெயர்வு களின்போதும் மிகக் கவனமாக பாதுகாத்து வைத்திருந்ததன் நிமித்தம் 2011 ஆம் ஆண்டில் கந்தரோடைக்கு இலங்கைத் தொல்லியல் திணைக்களம் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து அகழ்வாராய்ச்சிக்கு வருகைதந்திருந்தபோது எமது கற்காலச்சேகரிப்புக்களை காண்பிக்க முடிந்தது. அந்த நிகழ்வே யாழ்ப்பாணத்தில் கற்காலம் பற்றிய ஆய்வில் ஒரு புதுத்தெம்பினை எமக்கு வழங்கியது. இலங்கைத் தொல்லியல் திணைக்களமானது வடமராட்சியிலிருந்து சேகரிக்கப்பட்ட கற்காலத் தொல்லியல் எச்சங்களை **உண்மையான கல்லாயுதங்கள்** என உறுதிப்படுத்தியதன் பின்னரே யாழ்ப்பாணத்தில் கற்கால மனிதக் குடியேற்றமொன்று தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்தது என்பது நிரூபணமாயிற்று. பருத்தித்துறையில் மாயக்கைக் குகைக்குள்ளிலிருந்து கிடைத்த கீழைப்பழங்கற்கால கைக்கோடரியானது இற்றையிலிருந்து 600000 வருடங்களுக்கு முற்பட்டது என்பதனை அமரராகிவிட்ட **கலாநிதி சிரான் தெரணியாகல** அக்குகையின் முன்நிலையில் நின்று 2011 ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தியிருந்தார். அவருடைய உறுதிப்படுத்தலின் விளைவே 2019இல் அவுஸ்திரேலிய சிட்னிப்பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியர்கள் மாயக்கைக்கு வருகை தந்து அகழ்வு வேலைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பாயமைந்தது. இதன்பின்னர் எமது ஆய்வுகள் கற்காலம் பற்றிய தேடலில் மிகவும் அக்கறையுடன் தொடர்ச்சியாக அமையத் தொடங்கின.

## யாழ்ப்பாணத்தில் கற்கால மையங்களும் தொல்லியல் மேலாய்வுகளும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கா. இந்திரபாலாவின் வழிகாட்டலில் இறுதியாண்டுப் பரீட்சையின் இறுதி யலகுக்காக 1979 ஆம் ஆண்டில் ஆய்வுக்கட்டுரை ஒன்றினை அமைக்க வேண்டி, **யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள பிரதான தொல்லியல் தலங்கள்** என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் ஆய்வொன்றினை முன்னகர்த்திச் செல்லும்போதே வடமராட்சி தம்பசெட்டியிலுள்ள **மாயக்கை குகை** தொடர்பான தொன்மங்களை முதன்முதலாக வெளிக்கொண்டுவர முடிந்தது.





மாயக்கைக்குகையின் தொன்மமானது குகைவாழ் மனிதர்களைப் பற்றியதாக அதாவது குகைக்குள் வாழ்ந்து வந்த அமானுஷ்ய மனித குலங்கள் பற்றியதாகவே அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கல்லினாலான கைக் கோடரிகள் பல இக்குகையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட பின்னணியில் ஒரு பண்பாட்டுக்குழுவினர் வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தில் இக்குகைக்குள் வாழ்ந்திருந்நமை தெளிவாகின்றது. அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னிப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓர் அகழ்வாய்வுக்குழுவினர் மாயக்கைக் குகை அகழ்வுக்காக 2019 இல் வருகை தந்து அகழ்வாய்வில் ஈடுபட்டனர். இவ்வாய்வு மேலும் இந்த ஆண்டிலிருந்து தொடர்வதற்கான முயற்சிகளில் தொல்லியல் திணைக்களம் ஈடுபட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மாயக்கையிற்கிடைத்த கற்காலக்கருவிகளானவை இரு பிரதான வகையீடுகளில் கிடைத்துள்ளன. அவையாவன : 1.) லெவலோசியன் முறையில் உருவாக்கப்பட்ட Unifacial கல்லாயுதம், 2.) அச்சூலியன் வகைக் கைக் கோடரி ( Bi Facial). இக்கற்காலக்கைக் கோடரிகளை உருவாக்குவதற்கு மாயக்கைக் கற்குகையில் சேட் வகைக்கற்களே பயன்படுத்தப்பட்டிருந்தன.இங்கு காட்டப்பட்டுள்ள முதலாவது படத்தி லுள்ள கைக் கோடரியானது சேர்ட் வகைக் கல்லினாலான ஒருபக்கப் பயன்பாட்டுக்குரிய கருவியாகக் காணப்படுகின்றது. இரண்டாவது படத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கற்கருவியானது வெண்கருங்கல்லினாலான இருபக்கப் பயன் பாட்டிற்குரிய கைக் கோடரியாகக் கண்டெடுக்கப்பட்டது. மூன்றாவது படத்திலுள்ள கற்கருவியானது மிகவும் வைரமான சுண்ணக்கல்லினாலான கற்கருவியாகும்.







இவற்றுள் முதலிரு கற்கருவிகளும் தொல்லியல் திணைக்களத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. **Conservation of Action Plan** என்ற தலைப்பில் இலங்கைத் தொல்லியல் துறையினால் வெளியிடப்பட்ட 2014ஆம் ஆண்டு ஆய்வறிக்கையில் எம்மால் கண்டுபிடிக்கப்பெற்று ஆராயப்பட்ட வடமராட்சியிலுள்ள **மாயக்குகை என்று அழைக்கப்பட்ட மாயக்கை மையம் கீழைப்பழங் கற்காலத்திற்குரிய இடமாக** விபரிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (**Action Plan for Conservation and Sustainable Use of Palaeobiodiversity in Sri Lanka by Biodiversity Secretariat Ministry of Environment and Renewable Energy-2014)**

Figure 10 (a) An open air site: Prehistoric man manufacturing stone tools (© KMA)





a) A chert Hand Axe from Jaffna (© KMA)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிட்னிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கிசோக் நிமால் பெரேராவுடன் மாயக்கையில்-2019.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாயக்கைப் பிராந்தியம் கீழைப்பழங்கற்காலப் பண்பாட்டு மையமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையைக் காட்டும் படம்**




**A representation of some of the important palaeobiodiversity sites of Sri Lanka (Kelum Manamendra - Arachchi)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயிலிட்டி– கற்காலத்துறைமுகம்**

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கற்கால கருவிகள் கிடைத்த இரண்டாவது மையமாக **மயிலிட்டித்துறைமுகம்** காணப்படுகின்றது. துறைமுகங்கள் அதிகாரசபையின் விரைவுபடுத்தப்பட்ட துறைமுக அபிவிருத்தித் திட்ட முன்னெடுப்புகளுக்குள் 2018-20இல் மயிலிட்டித்துறைமுக அபிவிருத்தித்திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. துறைமுகக் கடற்பரப்பினை ஆழமாக்கும் நடவடிக்கைகளின் போது நாமும் திரு வே . அம்பிகைபாகனுமாக அங்கு தங்கி நின்று கிடைக்கக் கூடிய தொல்லியல் எச்சங்களை சேகரித்துக் கொண்டோம். மயிலிட்டித்துறைமுகப் பரப்பினுள் நன்னீர் வந்து சங்கமமாகும் பரப்புக்களிலேயே மனிதனால் செய்யப்பட்ட கற்கருவிகள் காணப்பட்டன. அவை பெருமளவிற்கு மெசோலிதிக் காலப் பரப்பிற்குள் உள்ளடங்கும் குறுணிக்கற்காலப் பண்பாட்டிற்குரியவையாகக் காணப்பட்டன. 2019 இல் மாயக்கை அகழ்வாய்வின் பொருட்டு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த அவுஸ்திரேலியாவின் சிட்னிப்பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வாளர்களும் மயிலிட்டித்துறைமுகப் பரப்பில் காணப்பட்ட கடற்கரையோர மண்திட்டுப் படிவுகளுக்குள்ளிலிருந்தும் பேச்சியம்மன் கோயிலின் அமைவிடமான பழந்துறைமுகத்தரை மேற்பரப்பிலிருந்தும் குறுணிக்கற்காலப் பண்பாட்டிற்குரிய கற்கருவிகளை சேகரித்துக் கொண்டனர். மயிலிட்டித்துறைமுகப்பரப்பில் பேச்சியம்மன் ஆலயச் சுற்றுப்புறச் சூழலே மிகவும் தொன்மமான தொல்லியல் எச்சங்களைக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

**தொல்லியற்சான்றுகள் மீட்டெடுக்கப்பட்ட சூழ்நிலை**

இலங்கை அரசாங்கத்தின் விரைவுபடுத்தப்பட்ட வடஇலங்கை மீதான அபிவிருத்தித் திட்டங்களுள் மயிலிட்டித் துறைமுகத்தின் புனர்நிர்மானமும், புதிய படகுத்தளங்களை அமைத்தலும் ஐஸ் தொழிற்சாலை, சந்தை, கடைகள்-வீதிகள், நன்னீர்த் தாங்கிகள். வாகனத்தரிப்பிடங்கள், தொழிலாளர் தங்கும்- ஓய்வெடுக்கும் - உணவு உண்ணும் விடுதிகள் என பன்முகத்தேவைகளை நிறைவு செய்யும் பாரிய துறைமுகத்தரிப்பிடத்தினை அமைப்பதற்கான தொடக்க நடவடிக்கைகள் ஆரம்பமாகும் சமயத்தில் துறைமுகப்பரப்பிலிருந்து மேற்படி தொல்லியல் எச்சங்கள் அடயைாளம் காணப்பட்டு, மீட்டெடுக்கப்பட்டுள்ளன. துறைமுக அதிகாரசபையின் அனுமதியுடனேயே இம்முயற்சியில் ஈடுபட்டிருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயிலிட்டித்துறைமுகப்பரப்பில் ஆய்வில் ஈடுபட்டிருக்கும் சிட்னிப்பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக்குழுவினர்.**





**குறுணிக்கற்காலக் கருவிகளும் அவற்றின் தொல்லியல் முக்கியத்துவமும்**

மயிலிட்டித் துறைமுகத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களுள் Microlithic எனக்குறிப்பிடப்படும் கற்கருவி வகைகளுக்குரியதாகக் அடையாளம் காணப்பட்ட குறுணிக்கற்காலப் பண்பாட்டினைப் பிரதிநித்துவம் செய்யும் இரு கருவிகள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று White Crystal எனக்குறிப்பிடப்படும் வெண்பளிங்குக் கல்லினாலான Microlithic Blade கிடைத்துள்ளது. மாந்தை, பூநகரி, போன்ற இடங்களில் கிடைத்த Microlithic Blade கருவிகளை விட உருத் தோற்றத்தில் சற்றுப் பெரிதான அளவில் மயிலிட்டித்துறைமுகத்திலிருந்து கிடைத்திருப்பது ஒரு முக்கியகாலகட்டத்திற்குரிய வரலாற்று மாற்றத்தினை ஏற்படுத்ததுவதற்கு காரணமாக உள்ளது. இவ்விருவகையான கற்கருவிகளும் மயிலிட்டித்துறைமுகத்தின் கிழக்குக் கரையோரமாகவுள்ள பழந்துறையுடன் இணைந்தவகையிலான கடற்கரையோரத்தில் இருந்து மீட்டெடுக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டுவகையான கற்கருவிகளையும் பரீட்சித்த தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வீ. செல்வக்குமார் ( கடலடித்தளத் தொல்லியல் ஆய்வியலாளர்) இவையிரண்டும் கற்காலக்கருவிகள் என்பதனை திட்டவட்டமாக உறுதிப் படுத்தியுள்ளார். ஆனால் இரண்டாவதன் காலத்தினை தெளிவுபடுத்த முடியாதுள்ளது எனவும் முன்னையது குறுணிக்கற்கால கற்செதிள் (Stone Blade) எனவும் தெளிவுபடுத்தியள்ளார். எமது ஆய்வுப்பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் தற்போதய மயிலிட்டித் துறைமுகத்துக்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள **பழந்துறையோடு** இணைந்துள்ள **பேச்சியம்மன் கோவில்** நிலப்பரப்புடன் மிகத் தொன்மையான தொல்பொருட்கள் புதைந்துள்ளதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்க முடிந்துள்ளது. இக்கோவிலின் அடித்தளத்தில் குறுணிக்கற் பண்பாட்டு மண்படைகள் புதைந்துள்ளமையை இக்கற்காலக் கருவிகளின் கண்டுபிடிப்புக்கள் எமக்கு வெளிப்படுத்தியுள்ளன என்றே கொள்ள வேண்டும்.



**மயிலிட்டித் துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட குறுணிக்கற்காலப் பண்பாட்டுக்குரிய வெண்படிகக் கண்ணாடிக் கல்லினாலான Blade என்று குறிப்பிடப்படும் கருவி– முப்பக்கப் பார்வையில் தரப்பட்டுள்ளது.**



**மயிலிட்டித்துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட Chert வகையான கல்லாயுதமொன்றினது தோற்றமானது மூன்று நிலைகளில் காட்சிப்படுத்தப்படுகின்றது. இக்கற்கருவியானது குறுணிக்கற்காலப் பண்பாட்டுக்குரியது என பேராசிரியர் கலாநிதி V. செல்வக்குமார் (தஞ்சைப் பல்கலைக்கழகம் – கடல்சார் தொல்லியல்துறை) அவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயிலிட்டித்துறைமுகப்பரப்பில் சேகரிக்கப்பட்ட குறுணிக்கற்பண்பாட்டு கருவிகள்.**



வடஇலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றின் இயல்புகளை கண்டறிவதற்கு மயிலிட்டித்துறைமுகத்திலிருந்து கண்டெடுக்கப்படும் தொல்லியல் எச்சங்கள் திட்டவட்டமானமுறையில் உதவுகின்றன. யாழ்ப்பாணக்குடாநாட்டினைப் பொறுத்தவரையில் இதுவரையில் கண்டறியப்பட்ட மனிதக்குடியிருப்புக்களின் பரவலும் அவற்றின் தொன்மமும் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரியதாகவே தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் குடாநாட்டின் கண் மிகஅண்மைக்காலங்களில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளும் அகழ்வாய்வுகளும் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குமப்பால் ஏற்பட்டிருந்த கற்கால மனிதக் குடியிருப்புக்களுக்குரிய தொல்லியல் தடயங்களைத் தந்து கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதியகற்காலம் என்ற நிலையிலிருந்த கற்கால மனித வாழ்வு பற்றிய தெல்லியல் எச்சங்கள் எமது ஆய்வில் கிடைத்திருக்கின்ற முறையில் வடஇலங்கையின் வரலாற்றுப் பரிணாமத்தின் வளர்ச்சியினை இப்பின்னணியில் செப்பனிட முடியும். இவ்வெண்ணக்கருவினை மேலும் வலுவூட்டுவதாகவே நாம் இப்பொழுது காரைக்காலில் மீட்டுவரும் கற்காலத் தொல்லியல் எச்சங்கள் காணப்படுகின்றன.





**மயிலிட்டி துறைமுகப்பரப்பில் கிடைத்த குறுணிக்கற்கால இலிங்க வடிவங்கள்– சிவவழிபாட்டின் தொடக்க வடிவங்கள் திருவான்மியூரையடுத்து யாழ்ப்பாணத்தில்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காரைக்காலில் (இணுவில் - கோண்டாவில்) கற்காலம் பற்றிய ஆய்வுகள்**

**2022ஆம் ஆண்டில் வெளிநாடு வாழ் அன்பர் ஒருவரின் ஆலோசனையடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியுதவித்திட்டத்தின் கீழ் இப்புதிய தீர்த்தக்கேணி அமைப்புச் செயற்பாடுகள் காரைக்கால் சிவன் கோவிலில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. காரைக்கால் கோயில் வளாகத்தின் பின்வீதியில் நாகதம்பிரான் ஆலயத்திற்கும் பைரவர் ஆலயத்திற்கும் இடையிலுள்ள குறித்த மையத்தில் தீர்த்தக் கேணி அமைக்கப்படுவதற்கு உரிய கால்கோள் எடுக்கப்பட்டு அதன் பொறுப்பும் புகழ்பெற்ற** R.G.Associate Civil Engineering Construction **நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கனரக வாகனங்களின் உதவியுடனேயே இப்புனித தீர்த்தக்கேணி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்ட பணிகளுடாகவே நாமும் பயணித்து இவ்வாச்சரியமான அரிய கண்டுபிடிப்பினை நிகழ்த்த முடிந்துள்ளது.**

வரலாற்றுத் தொன்மம் வாய்ந்த காரைக்கால் சிவன் கோவிலுக்காக புதிதாக தோண்டிக்கட்டப்படும் தீர்த்தக்கேணியில் 45அடி ஆழம் வரை வெளிப்படுத்தப்பட்ட பல மண்படைகளுள் சிறப்பான ஒரு மண்படையாக கிரவல் படை காணப்படுகின்றது. இம் மண்படையிலிருந்தும், இவ்வாலய வளாகத்தின் மருங்கிலமைந்துள்ள இடுகாட்டின் முகப்புப் பரப்பில் அமைந்துள்ள ஒரு தோட்ட நிலத்தின் 08அடி ஆழத்திலிருந்தும் கிடைத்துள்ள தொல்பொருட்களுமாக அவை முறையே பழங்கற்காலப் பண்பாட்டிற்கும் ( Lower Paleolithic culture and Neolithic culture) புதிய கற்காலப்பண்பாட்டிற்கும் உரியவையாக கணிக்கப்பட்ட நிலையில் அவற்றினைப்பற்றிய தொல்லியல் முக்கியத்துவத்தினை ஆராய முடிகின்றது. யாருமே எதிர்பாராத வகையில் கிடைத்துள்ள இத்தொல் பொருட்களை அடையாளம் காண்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தினை கலாநிதி நிமால் பெரேரா ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காரைக்கால் புனித தீர்த்தக்கேணியில் கிரவல் மண்படைகளின் தோற்றம்





அவருடன் அண்மையில் கந்தரோடைக்கு வருகை தந்திருந்த பிரான்சிலுள்ள Kean பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியான கலாநிதி அரியானியின் தலைமையின் கீழ் வருகைதந்திருந்த தொல்லியல் ஆய்வுக்குழு நிபுணர்களினால் இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் யாவும் பார்வையிடப்பட்டு அவற்றின் காலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. தனித்துவம் வாய்ந்ததும் கருவியாக்கத்திற்குரியதும் வாழ்வியலுக் குரியதுமான புதிய கற்காலத்திற்குரிய கல்லினாலான உழவுக்கருவி (plough) மற்றும் சடங்குச் சார்புடையனவாகக்காணப்படும் கல்லினாலான புராதனமான லிங்க வடிவங்களும் காணப்படுவதிலிருந்து அப்பொருட்களை புராதனகாலத்தில் இருந்து மனிதன் உபயோகித்திருந்தான் என்ற யதார்த்தமான வரலாற்றுக்கருத்தியலை காரைக்காலில் நிறுவுவதற்கு ஏற்ற பொருத்தமான சூழல் ஏற்பட்டுள்ளது. இப்புதிய சூழ்நிலையே காரைக்கால் சிவன்கோவிலின் தோற்றம் தொடர்பான தொன்மத்துக்கான இருப்புப் பற்றிய கருத்தியலை நிறுவுவதற்கும் உதவியுள்ளது. கல்லாயுதமாகக் உறுதிப் படுத்தப்பட்ட இரண்டு கைக் கோடரிகளும், நடுகல் வழிபாட்டு முறையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து காணப்பட்டிருக்கக் கூடிய புதியகற்காலத்திற்குரிய கல்லினாலான உழுகருவியும் மற்றும் வழிபாட்டுப் பொருட்களுமாக கண்டுபிடிக்கப் பெற்ற இத்தொல்பொருட்களுடன் இணைந்த வகையில் இப்புதிய கருத்தியலை உருவாக்க முடிந்துள்ளது. நாகவடிவக் கற்சிற்பமொன்றும் கல்லினாலான உழுகருவி ஒன்றுமாக இக்கோயில் வளாக மருங்கில் எதிர்பாராத விதமாகக் கிடைத்திருப்பது இக்கோயிற் சூழலின் தொடர்ச்சியான வளர்ச்சியானது புதியகற்காலத்தின் பின்னணியிலும் முன்னோக்கி நகர்த்துவதற்கு அடிப்படைக்காரணமாக அமைந்துள்ளது. இலிங்கமரபு, நாகவழிபாட்டு மரபு, நடுகல் வணக்கமுறை ஆகியன ஒன்றிணைந்திருந்த மிகப்புராதனமான ஒரு பண்பாட்டுச் சூழலை அண்மைய கண்டுபிடிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட இம்மரபுகள் வரலாற்றுக்காலத்திலிருந்து வளர்ச்சியடைந்து வந்திருக்கக் கூடிய ஒரு பண்பாட்டுச் சூழலுக்குமப்பால் வரலாற்றுக்கு முற்பட்டகால வாழ்வியல்முறை ஒன்று காரைக்கால் பிரதேசத்தில் வேரூன்றியிருந்தமைக்கான தொல்லியல் தடயங்களை இப்புனித தீர்த்தக்கேணியின் அகழ்வுகள் ஊடாக எமக்குக் கிடைத்ததுள்ளன. கிரவல் எனப்படும் மண்படையூடாகவே கற்கருவிகள் என உறுதிப்படுத்தப்பட்டு அவற்றை அவ்வாறு அழைக்கக் கூடிய வகையில் சேட் வகைக்கல்லி னாலான மனிதப்பாவனை யிலிருந்த அக்கற்கருவிகள் கிடைத்துள்ளன. இப்பின்னணியில் யாழ்ப் பாணத்தில் பரந்தவெளி (open valley) கற்காலப்பண்பாட்டிற்குரிய குடியேற்றம் நிகழ்ந்திருந்தமையின் பின்னணியில் இணுவில் - கோண்டாவில் - உரும்பிராய் ஆகிய பழம்பெரும் கிராமங்களை ஒன்றிணைக்கும் முச்சந்தி யில் பாரம்பரிய இடுகாட்டுடன் இணைந்த காரைக்கால் சிவன்கோயில் வளாகமும் அதன் பின்னணி நிலமும் **"ஒரு பரந்தவெளி கற்காலப் பண்பாட்டுத் தளமாகக்"** உருவாவதற்குச் சாதகமான இடச்சூழ்அமைதியைக் கொண்டு விளங்கியது என்பது இங்கு நிதர்சனமாக குறிப்பிட்டுக்கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்கால் (கோண்டாவில் – இணுவில்) கைக்கோடரியின் இருபக்கத்தோற்றங்கள்





சேட்வகைக் கல்லினாலான இக்கைக்கோடரியானது **லெவலோசியன்** தொழினுட்பத்தின் அடிப்படையில் அதன் மீன்புருவங்கள் நெடுஞ்சாண் முறையில் அமையுத்தக்கவாறு உருவாக்கம் பெற்றதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கற்கருவியானது இருபக்கப் (Bifacial) பாவனையின் பொருட்டும் உருவாக்கப்பட்டதாகத் தெரிகின்றது. 33 mm நீளமும் 28 mm அகலமும் கொண்டு காணப்படும் இக்கருவியானது தோற்றத்தளவில் ஒரு குத்துவாள் போன்று காணப்படுகின்றது. இக்கற்கருவியினை ஜீவனோ பாயத்திற்காக உபயோகித்திருந்த மனிதன் காரைக்காலில் வாழ்ந்த காலச்சூழலானது பிளைத்தோசீன் காலத்தில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டகாலமாக இருந்தது என்பதனை கிரவல் கற்படிமங்களுக்கு கீழ் படிந்து காணப்படும் கருஞ்சேற்றுப் படிவு எடுத்துணர்த்துகின்றது. இக் கருஞ்சேற்றுப்படிமமானது ஓர் ஆற்றுப்பள்ளத்தாக்கின் 'U' வடிவமைப் பினைக்கொண்ட கிரவலுக்குக் கீழ்த்தளத்தில் தளத்தில் படகு ஒன்றினை கவிழ்த்து வைக்கப்பட்ட தோற்றத்தினை ஒத்தவகையில் காணப்படுவது பிளைத்தோசீன் கால வெள்ளப்பெருக்கின் படிவினை எமக்கு ஞாபக மூட்டுகின்றது. மயோசீன் கால சுண்ணக்கல் படிவுகளின் மத்தியில் கிரவல் மண்படையடுக்குகளும் அதனுடன் இணைந்துகடல்வாழ் ஓட்டு( **shell)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினங்களின் உயிர்ச்சுவடுகளும் தரையின் மேற்பரப்பிலிருந்து 40 அடி ஆழத்தில் காணப்படுவது என்பது யாழ்ப்பாணக்குடாநாட்டின் தோற்றம் தொடர்பான புதியதொரு கருத்தியலுக்கு வழிவகுப்பதாக உள்ளது.. காரைக்கால் சிவன் வளாகத்தின் தரைக்குக் கீழ் மணல்படையடுக்களின் ஒழுங்கு பற்றி ஆராயுமொருவர் புவியமைப்பியல் ரீதியாக கடல் மட்டத்துடன் 40 ஆவது அடி ஆழத்திலுள்ள கடல்வாழ் உயிரினச்சுவடுகள் தொடர்பு கொண்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். யாழ்ப்பாணக் குடாநாடானது கடல் மட்டத்திலிருந்து 50 அடி உயரத்தினை சராசரியாக கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதேயளவு ஆழத்தில் காரைக்காலில் தோண்டப்பட்ட புனித தீர்த்தக்கேணிக்கான பிரமாண்டமான அகழ்வுக்கிடங்கின் மணல்படையடுக்குகள் ஊடாக கற்காலக் கருவிகள் உயிரினச்சுவடுகளுடன் கிடைத்திருப்பது வரலாற்று ஆய்வாளருக்கு கிடைத்த புதிய தளத்துடனான ஒரு செய்தியாகும்.





**கிரவல் மணல்படையில் காணப்படும் உயிரினச் சுவடுகளும் கல்லாயுதங்களும்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைக்கால்(கோண்டாவில்- இணுவில்) தோட்டமொன்றிலிருந்து அகழ்ந்து பெறப்பட்ட கல்லினாலான உழவு கருவியொன்றின் இருவேறு வடிவங்கள் (10000 வருடங்கள்- புதிய கற்காலம்)




நடுகல்லுடன் காணப்பட்ட நாகக் கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைக்கால் சிவன் கோவில் வளாகத்தில் (கோண்டாவில் – இணுவில்) புனித தீர்த்தக் கேணிக்காக வெட்டப்பட்ட குழியின் வடமேற்குப்பக்கச் சுவரில் காணப்பட்ட மண்படையடுக்குகள்.

**காரைக்காலில் கிடைத்த கடல்வாழ் உயிரினச்சுவடுகள் ( Marine Fossils) நுண்துளையிடப்பட்ட உயிரினச்சுவட்டின் தோற்றம் – கழுத்துப்பதக்கமாக உபயோகிக்கப்பட்டதா?**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**கலாநிதி நிமால் பெரேராவுடன் பிரான்ஸ் Kean பல்கலைக்கழகத்தில் தொல்லியல் பேராசிரியராகக் கடமையாற்றும் கலாநிதி அரியானி காரைக்கால் அகழ்வுக் கிடங்கில் (கோண்டாவில்–இணுவில்) கிடைத்த கல்லாயுதங்களை பரிசோதிக்கும் நிகழ்வைக்காட்டும் புகைப்படங்கள்**

## வலிகாமத்தில் கற்காலக்குடியேற்றங்களும் புதியகற்காலக் குளக்குடியிருப்புக்களும்

தற்போதைய நிலையில் எமக்குக் கிடைக்கின்ற சடப்பொருள் ஆதாரங்களின்படி யாழ்ப்பாணக்குடாநாட்டில் **Open Field stone age Colonization** ஏற்பட்டிருந்தமைக்கான சாதக நிலையை ஆராய முடிகின்றது. அதற்கு வளம் சேர்க்குமாப்போல் குடாநாட்டின் நிலப்பரப்பில் ஆங்காங்கு காணப்படும் தரைக்கீழ்க்குகைகள் ஆதாரசுருதியாக அமைந்து காணப்படுகின்றன. வலிகாமத்தில் கீரிமலைக்கும் மாவிட்டபுரம் புனித மையத்திற்கும் இடைப்பட்ட கடற்கரையோர கற்பார்தொடரானது மிக முக்கியமான வரலாற்றுக்கு முற்பட்டகால குடியிருப்பபுக்களை கொண்டிருந்திருக்கக் கூடிய சூழலைக் கொண்டிருந்தது. காங்கேயன்துறைக்கு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அண்மித்த நிலையில் காணப்படும் மயிலிட்டித்துறைமுகமானது குறுணிக்கற்காலத்தடயங்களை கொண்டுள்ளமை அண்மைக்கால ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள தன்மையின் அடிப்படையில் பார்க்கும்போது கீரிமலைக் கடற்கரையோரப்பரப்புக்களும் வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொல்லியல் தடயங்களைக் கொண்டிருந்திருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குடாநாட்டின் மேற்கு மற்றும் வடக்குக் கரையோரப்பிரதேசங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலக் குடியேற்றங்களை **Open Field of Stone Age Colonization** ஆக கொண்டிருந்திருக்க வேண்டும் என்ற கருத்துருவத்தினை உறுதிப்படுத்தும் காலம் விரைவில் வரும்வரைக்கும் கற்காலம் பற்றிய ஆய்வுகள் இங்கு தொடரப்படவேண்டும். .இக்குடியேற்றங்கள் ஒருவிதமான வாணிப- வர்த்தக தொடர்பாடலினூடே ஏற்பட்ட குடிவளர்ச்சியாக உருவாகியிருக்க வேண்டும்.

மயோசீன் காலச் சுண்ணக்கற்பார் நிலவுருவங்களில் கீழைப் பழங்கற்காலக் கற்கருவிகள் பல ஆந்திரப்பிரதேசத்திலும் தமிழகத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக்குடாநாடு மயோசீன்காலப் பரப்பிலேயே தோற்றம் பெற்றது என புவியமைப்பியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இக்காலகட்டத்தில் தமிழகமும் யாழ்ப்பாணக்குடாநாடும் ஒன்றாகவே இணைந்திருந்தது என இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் Action Plan Report -2014 குறிப்பிடுகின்றது. தமிழக நிலப்பரப்பு யாழ்ப்பாணக்குடாநாட்டின் நிலப்பரப்பினை விடத் தொன்மை யானது. யாழ்ப்பாணக்குடாநாடு தோற்றம் பெறுவதற்கு முன்னரே தமிழகத்தில் உயிரினச்சூழலின் பரிணாமம் நிகழத்தொடங்கிவிட்டது. இப்பின்னணியில் நிகழ்ந்த கடல்கோள்கள் மற்றும் சமுத்திர வற்றுப்பெருக்குக் காரணமாக யாழ்ப்பாணக்குடாநாட்டின் கரையோரங்கள் அகண்டும் ஒடுங்கியும் தமிழக நிலப்பரப்பிலிருந்து பிரிந்தும் இணைந்தும் வந்திருந்தமையை தொல்லியலாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். தற்போதைய நிலையில் காவிரிக் கழிமுகத்திற்கு நேர்முகமாக குடாநாட்டின் வடமேற்கு முனையம் எதிர்கொண்டிருப்பதனையும் காணலாம். கடந்த 70000 வருடங்களுக்குள் இலங்கைத் தீவானது 17 தடவைகள் இந்திய நிலப்பரப்புடன் இணைந்தும் பின்னர் விடுபட்டும் இருந்தமையை சிரான் தெரணியாகல தனது ஆய்வு நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இப்பின்னணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே காரைக்கால் சிவன்கோவில் வளாகத்தில் கிரவல் மண்படை யடுக்கினூடே காணப்பட்ட கடல்வாழ் உயிரினச்சுவடுகள் படியவிடப் பட்டமைக்கான பின்னணி நிகழ்வினை எதிர்காலத்தில் புவியமைப்பியல் ஆய்வாளர்கள் ஆராயவேண்டும். மணல்படிவுத் தொழிற்பாட்டினூடே இக்குடாநாடு தோற்றுவிக்கப்பட்டதா அல்லது தமிழகத்தின் ஒரு துண்டாக இயற்கைச் செயற்பாட்டினால் வெட்டப்பட்டதா என்பது தெளிவு படுத்தப்படவேண்டிய ஒரு விடயமாகும். இப்பின்னணியிலே தான் 45 அடி ஆழத்தில் கருஞ்சேற்று மண்படிதலுக்கான கடல்தொடர்புகளையும் கடல்வாழ் உயிரினப் படிதலுக்கான காரணைங்களையும் கண்டறிய முடியும். கிரவல் படைக்குக் கீழே கடல்வாழ் உயிரினச்சுவடுகளுடன் கூடிய கருமண்சேற்றுப்படிதல் நிகழ்ந்தமைக்கான காரணத்தினை விளங்கிக் கொண்டால் வலிகாமத்தில் உருவாகியிருந்த குளக்குடியிருப்புக்களுக்கான தோற்றத்தினையும் விளங்கிக் கொள்ளமுடியும்.

கோண்டாவில் - நந்தாவில் குளக்குடியிருப்பு , இணுவில் குளக் குடியிருப்பு, கோப்பாய் குளக்குடியிருப்பு . சுதுமலை குளக்குடியிருப்பு ஆகியன புதியகற்காலத்துடன் உருவாகிய கிராமக்குடியிருப்புக்களாக பரிணாமமடைந்ததை கிடைத்துள்ள தொல்லியல் எச்சங்களூடாக கண்டுகொள்ள முடிகின்றது. கல்லினாலான தொல்லியல் சான்றுகள் சில நந்தாவில் குளத்தின் விளிம்போரங்களில் இருந்தும் மீட்டெடுக்கப்பட்டுள்ள மையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றினைவிட உயிரினக்சுவடுகள் நிறைந்த **Coral Stone** ஒன்றும் நந்தாவில் குளத்தின் மத்தியிலிருந்து பெறப்பட்டமையானது மேலும் எமது ஆய்விற்கு வளம் சேர்ப்பதாக உள்ளது. இக்குளங்களின் மையப்பரப்பிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட கறுப்பு வர்ணக் களிமண் காரைக்கால் புனிததீர்த்தக்கேணியின் அகழ்வின்போது மீட்டெடுக்கப்பட்ட அதே மண்படையின் தன்மையை நினைவுபடுத்துகின்றது. எனவே இப்பின்னணியின் புவியமைப்பியலை வலிகாமத்தில் **வில்** என முடிவடையும் கிராமங்களின் ஊடாக விரிந்து பரந்து செல்வதனை மேலும் விரிவாக ஆராயும்போது அங்கு புதியகற்கால வாழ்வியலை வெளிப்படுத்தக்கூடிய தொல்லியல் எச்சங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதனை உணரமுடியும்.. யாழ்ப் பாணக்குடாநாட்டில் பெருங்கற்காலக்குடியிருப்புக்கள் மிக நெருக்கமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகுவதற்கு வழிசமைத்த முன்னோடி நிகழ்வானது புதியகற்காலத்தில் குடாநாட்டில் அடியிடப்பட்டுவிட்டது. அதனையே இப்பொழுது ஆனைக் கோட்டைக்கிராமத்திலிருந்து தற்போது பெறப்பட்டுள்ள ஒரு வட்டவடிவான கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட தொல்பொருள் புதியகற்கால வாழ்வியலுக்குரியதாக காணப்படுவதிலிருந்து பெருங்கற்கால வாழ்வியல் முறைக்கு முன்னரேயே யாழ்ப்பாணக்குடாநாட்டில் மக்கள் குடியேற்றமும் வாழ்வு முறை ஒன்றும் உருவாகியிருந்தது என்பதனை தொல்லியல் ஆய்வு முடிபுகள் உணர்த்துகின்றன.

**ஆனைக்கோட்டைக்கல்–**
**(இருதோற்றங்களில்)**





**முடிவுரை**

மிக அண்மைக்காலங்களாக பேராசிரியர் சாந்தி பப்பு என்பவர் தமிழகத்தில் அத்திரம்பாக்கம் என்ற மையத்தில் கற்காலம் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றார். கடந்த 12 வருடங்களாக நிகழ்த்தப்பட்ட கற்காலம் பற்றிய ஆய்வில் அவர் புதிய முடிவுகளை எட்டியுள்ளமையை உலகிற்கு அறிவித்துள்ளார். அதாவது கிழக்காபிரிக்காவிலுள்ள தன்சானியா விலிருந்து ஆதிமனிதன் புலம் பெயரத் தொடங்கிய காலகட்டமொன்றில் சினாய்க்குடாநாட்டினூடாக ஐரோப்பாவுக்கு புலம்பெயரும் வழியில் தங்கி வாழ்ந்த காலப்பரப்பில் உருவாக்கப்பட்ட கைக்கோடரிகள் போன்ற கல்லா யுதங்களின் மீது விஞ்ஞான முறைப்படி பெறப்பட்ட காலநிர்ணயத்தினை இந்தியாவில் அத்திரம்பாக்கத்தில் கிடைத்த கைக்கோடரிகளின் காலநிர்ண யத்துடன் ஒப்பிடும்போது அத்திரம்பாக்க கல்லாயுதமானது காலத்தில் முற்பட்டதாகக் காணப்படுகின்றது என்பதனை எடுத்துக்காட்டியுள்ளார். அவ்வாறாயின் இந்தியாவில் ஆதிமனிதன் தோற்றம் பெற்றானா என்றவொரு கேள்வியும் இப்பொழுது எழுந்துள்ளது. இப்பின்னணியில் வடமராட்சி யிலுள்ள மாயக்கையில் கிடைத்த கைக்கோடரியும் தமிழக அத்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கத்தில் கிடைத்தவையும் அமைவிடத்தினைப் பொறுத்தவரையில் ஒரே நிலப்பரப்பாக இணைந்திருந்த காலத்துச் சமகாலத்தவையாக அமையுமா என்றவொரு கேள்வியும் எழுகின்றது. அல்லது இரணைமடுப்பண்பாட்டின் தொடர்ச்சியாக காரைக்கால் வளாக பண்பாட்டிருப்பினை அடையாளம் காண முடியுமா என்றொரு முக்கிய வினாவும் எம்முன் எழுகின்றது. எது எவ்வாறெனினும் 1979ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட எமது தொல்லியல் ஆய்வு முயற்சிகள் பல தடைகளையும் தாண்டி இப்பொழுது வரலாற்றுக்கு முற்பட்டகால யாழ்ப்பாணம் தொடர்பான சடப்பொருட் தேடலில் அதிதீவிரமாக ஈடுபடவைத்துள்ளது. இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையுடன் எமது இந்த ஆய்வு முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. முன்னாள் தொல்லியல் பிரதி ஆணையாளராக கடமையாற்றிய கலாநிதி நிமால் பெரேரா அவர்களது பூரண ஒத்துழைப்பானது எமக்குக் கிடைத்தவண்ணமுள்ளது. அவரும் வரலாற்றுக்கு முற்பட்டகால இலங்கையின் தொல்லியல் ஆய்வில் தனது பட்டப்பின்படிப்பினை பூரணப்படுத்தியவராகவும் அகழ்வாய்வுகள் பலவற்றை அத்துறையில் நிகழ்த்தியவராகவும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் மீதான ஆய்வுகளில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளவராகவும் காணப்படுவதிலிருந்து எமது இவ்வாய்வு முயற்சிகளை வெற்றிகரமாக எதிர்காலத்திலும் முன்னெடுக்க முடியும். **இப்பின்னணியில் வரலாற்றுக்கு முற்பட்டகால யாழ்ப்பாணத்தின் வாழ்வியலை இணுவில் – கோண்டாவில் – காரைக் கால் சிவன் கோவில் வளாகத்தினைச் சூழ்ந்துள்ள பரந்தவெளித்தளங்களிலிருந்து வெளிக்கொண்டுவருவதற்கான வழிமுறைகளை எதிர்காலத்தில் தேடுவோமாக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை


1) Selvakumar, V., 2010, Tamil Cultural Connections across the world (up to 1600 CE) Archaeological Evidence from outside Tamil Nadu, Tamil University, Thanjavur.

2. கிருஷ்ணராசா, செ., 1998, தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

3. விசாகன், சு., 2010, இலங்கையில் மனிதக் குடியமைவு (மரபணுவியல் (DNA) அடிப்படையிலான ஆய்வு உருவரை, Tamil Information Centre, London.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

அன்பையும் பாசத்தையும் பண்பையும் அறிவையும் வளர்த்த எங்கள் அன்பின் குடும்பத்தலைவர் அமரர் வைத்திலிங்கம் துரைராஜா அவர்கள் 2021.05.02ம் திகதி இறைவனடி சேர்ந்தபோதும் மற்றும் எமது தாயினும் மேலாக எம்மை வளர்த்து உயர்நிலைக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வம் அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்கள் 2021.08.25ம் திகதி இறைவனடி சேர்ந்தபோதும் உடன் வருகை தந்து எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்தும் இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும் உதவிகள் பல செய்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை தொலைபேசி மூலமும் முகநூல், வைபர், வட்ஸ்அப் மூலமும் அனுப்பியவர்களுக்கும், மலர் வளையம், பதாகைகள், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி அறிவிப்புக்கள் என்பனவற்றினை வழங்கி மரண நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், கொக்குவில் தபால் அலுவலக தபால் அதிபர் மற்றும் உத்தியோகத்தர்கள் கோண்டாவில் உப-தபால் அலுவலக உத்தியோ கத்தர்கள் மற்றும் யா/ இணுவில் இந்துக் கல்லூரி அதிபர், பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி கட்டுரையினை பத்திரிகையில் வெளியிட்ட அன்னையின் சேவைக்காலத்தில் கடமையாற்றிய கோண்டாவில் இந்துக் கல்லூரி குடும்பத்தினருக்கும் மற்றும் அன்னையை பற்றி அஞ்சலி கவிதை தொகுப்பினை முகநூல் மூலம் காட்சிப்படுத்திய பழைய மாணவர்களுக்கும் மற்றும் எமது தந்தையாரின் சுகயீனத்திற்கு மருத்துவம் செய்த வைத்தியர் அவர்களுக்கும் எமது அன்னை யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்த வேளையில் உதவிகள் பல புரிந்த வைத்தியர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் 'கொரோனா' நோய்த் தொற்று மத்தியிலும் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் மற்றும் இந்நினைவு மலருக்கு நினைவுக் குறிப்புக்கள், அஞ்சலிகளை வழங்கிய பெரியோர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் மற்றும் இம்மலரிற்கு 'கற்கால யாழ்ப்பாணம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஆய்வுக் கட்டுரையினை தயாரித்து வழங்கிய வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி செல்லையா கிருஷ்ணராஜா அவர்களுக்கும்

மற்றும் இம்மலரினை சிறந்த முறையில் வெளியிட வழிகாட்டி உதவிகள் புரிந்த வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி செல்லையா கிருஷ்ணராஜா அவர்களுக்கும், திரு.இ. அருணகிரிவாசன் ( ஓய்வுநிலை முன்னாள் உப அதிபர் யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி) அவர்களுக்கும், திருமதி. வி. கடம்பமலர் (ஓய்வுநிலை முன்னாள் அதிபர் யா/ பரஞ்சோதி வித்தியாலயம்) அவர்களுக்கும் மற்றும் Print Master நிறுவனத்தாருக்கும் மற்றும் 15.09.2022ம் திகதி நடைபெற்ற 1ம் ஆண்டு நினைவு தினத்தில் நினைவுரைகளை நிகழ்த்தியவர்களுக்கும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும்,

மண்டப ஒழுங்கை சிறந்த முறையில் மேற்கொண்ட நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய திருமறை மண்டப நிர்வாகத்தினருக்கும் மற்றும் ஏனைய சகல வழிகளிலும் உதவிகள் செய்த அன்புள்ளங்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குமரகோட்டம்
கோண்டாவில்.
15.09.2022

இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-





Print@Print Master, Kokuvil. +94 778983322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org